Registered as a Newspaper    பக்கங்கள் 06    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    Peoples Daily

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    புரட்டாதி 10    [26-09-1993]    ஞாயிற்றுக்கிழமை    ஓசை 220


9. M. OA.

## கப்பலில் வரும் பொருள்கள் காங்கேசனிலும் சோதனை

யாழ். குடாநாட்டிற்கு கப்பல் மூலம் ஏற்றிவரப்படும் அத்தியாவசியப் பொருள்கள் இனிமேல் காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்தும் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என சிறிலங்கா இராணுவத்தின் யாழ்மாவட்ட தளபதி பிரிகேடியர் நமுனி தெரிவித்துள்ளார். கொழும்புத் துறைமுகத்தில் பொருள்கள் ஏற்றப்படும்போது பல மோசடிகள் நடைபெற்று வருவதாகவும் அதனால் இச் சோதனை அவசியமானது என்றும் இவ்வாறு சோதனையிடுவதன் மூலம் மோசடிகளைத் தவிர்க்க முடியும் என தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். கொழும்பில் கடற்படையினரதும் சுங்கப் பகுதியினரதும் தீவிர கண்காணிப்பின் கீழேயே இப் பொருள்கள் கப்பலில் ஏற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. முன்னர் வடபகுதிக்கு (6ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் புலிகள் அதிரடி; 7 சிங்களப் பொலிசார் பலி!

## பல பொலிசார் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மேற்கொண்ட துணிகரத்தாக்குதல் ஒன்றில் ஏழு சிறிலங்கா பொலிசார் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இத்தாக்குதலின் போது பல ஆயுதங்களும், இராணுவ உபகரணங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. நான்கு போராளிகளும் வீரச்சாவடைந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எல்லைப்புறக்கிராமமான கட்டுவன்வில் என்னும் கிராமத்திலேயே இத் தாக்குதல் இடம்பெற்றது. முப்பதிற்கும் மேற்பட்ட பொலிசாரைக் கொண்ட காவல் நிலையம் ஒன்றின் மீதே இவ் அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று அதிகாலை 2.35மணியளவில் இக்காவல்நிலையத்தை சுற்றிவளைத்த விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதல் சுமார் 15 நிமிடங்கள் வரை நீடித்தது. இம் மோதலில் ஏழு பொலிசார் கொல்லப்பட்டனர், பலர்படுகாயம் அடைந்தனர்.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் புறத்தில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளால் பொலிஸ் காவலரண்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

ஃ ஏ.கே எல் எம் ஜி — 01
ஃ அதற்குரிய ரம் மகசின் — 01
ஃ லிங் — 100
ஃ அல்டிமக்ஸ் எல்.எம் ஜி. — 01
ஃ 40 எம் எம் பிஸ்ரல் (சிங்கப்பூர் தயாரிப்பு) — 01
ஃ ரி 56-1 ரக துப்பாக்கி — 04
ஃ அல்டிமக்ஸ் மேலதிக சுடுகுழல் — 01
ஃ ரம் மகசின் — 01
ஃ 40 எம்.எம். ஷெல் — 09
ஃ ஏ கே. ரவைக்கூடு — 22
ஃ ஏ கே. கோல்சர் — 04
ஃ 5.56 எம் எம். ரவைகள் — 200
ஃ ஐ எம். ரவைகள் — 725
ஃ கிரனைட் — 04
ஃ நோமல் கிற்பாக் — 05
ஃ தண்ணீர்க்கான் — 02
ஃ கமறா — 01
ஃ வோக்மன் — 01
ஃ மழைக்கவசம் — 02

## 4 போராளிகள் வீரச்சாவு

(மட்டக்களப்பு) ...களப்பு)

## காங்கேசன் சீமெந்து ஆலை டிசம்பருடன் மூடிவிட திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதத்துடன் சீமெந்து ஆலையை மூடிவிட சீமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் ஏற்பாடு செய்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் 850 பேர் வேலை இழப்பார்கள், இவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் வேலை இழக்கும் தொழிலாளி ஒருவர் ஆகக் கூடுதலாக இரண்டு இலட்சம் நஷ்ட ஈடு பெறலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ‘வாதுவ’ மாத இறுதியில் வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டிற்கான மற்றுமொரு தொகுதி உணவு மற்றும் பொருள்களுடன் வாதுவகப்பல் இம்மாத இறுதியில் பருத்தித்துறையை வந் [5ஆம் பக்கம் பார்க்க]

## திலீபன் நினைவு நிகழ்வுகள் கோட்டரீதியாக நடைபெறும்

தியாகி லெப். கேணல் திலீபனின் 6ஆம் ஆண்டு நினைவு இறுதி நாள் நிகழ்வுகள் இன்று யாழ். குடாநாட்டில் கோட்டரீதியாக இடம்பெறஉள்ளன. இன்று காலை 7.00 மணிமுதல் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளும் மாலை பொதுக்கூட்டங்களும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் பொதுமக்களும் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளனர். தியாகி திலீபன் ஈகைச்சாவடைந்த நேரமாகிய காலை 10.48 மணிக்கு விடுதலைப் புலிகளும் பொதுமக்களும் மலரஞ்சலி செலுத்துவர். மேலும் கலை நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

### வலிகாமம்\தீவககோட்டங்கள் (கடற்புலிகள் உட்பட)

கடற்புலிகள் உட்பட வலிகாமம் தீவகக் கோட்ட மக்கள் இன்று காலை 7.00 மணி முதல் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் அமைக்கப்பட்டுள்ள உண்ணாவிரதப் பந்தலில் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவுள் [5ஆம் பக்கம் பார்க்க]

## இன்று தியாகி திலீபன் நினைவுநாள்; தமிழீழம் எங்கும் எழுச்சிகர ஏற்பாடு!

[யாழ்ப்பாணம்]

தமிழீழ தேசிய விடுதலைக்காக தன்னுயிரைத் தியாகம் செய்த தமிழீழமக்களின் நெஞ்...

...மல்லாது வடதமிழீழத்தின் ஏனைய பகுதிகளான கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய பகுதிகளிலும் ... பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளன.

வன்னிப் பிராந்தியத்திலும் பல இடங்களில் அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெறவுள்ளன...

இன்றைய இறுதிநாள் அஞ்சலி நிகழ்வுகளுக்காக தமிழீழமெங்கும் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது. நேற்றிரவு...

## கிளாலி-பூநகரி ...படகுச்சேவை

மட்டக்களப்பு எல்லைக் கிராமமான கடடுவன் வில்லில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப் பட்ட பொலிஸ் காவல் நிலையம் மீதான தாக்குதலில் நான்கு விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர்

★ மேஜர் சங்கர் / நாகேஸ்வரன் (சந்திரசேகரன் ஜெய சங்கர் கிருஷ்ணன் கோவில் வீதி, கல்லடி மட்டக்களப்பு)

★ மேஜர் கருணாநிதி/சார்லி (பாண்டியன் பத்மநாதன் காஞ்சிரன் குடா மட்டக்களப்பு)

★ லெப். சத்தியவாணன்/ கடாபி (வீராகமுத்து பரமேஸ்வரன் கதையாக்கன்தீவு கன்னன்குடா மட்டக்களப்பு)

★ வீரவேங்கை - கமலாலயம் (கதிராமம் கோவிந்தராஜா - எருவில் களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு)

மேற்கூறிய போராளிகளே வீரச்சாவடைந்தவர்களாகும் இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.



மேஜர் சங்கர் (நாகேஸ்வரன்)



மேஜர் கருணாநிதி (சார்லி)



லெப். சத்தியவாணன் (கடாபி)



வீரவேங்கை கமலாலயம்

## படகுச்சேவை

நாளை 27ஆம் திகதியும் மறுநாள் 28ஆம் திகதியும் கிளாலி-பூநகரி படகுச்சேவை நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

சங்களில் நிலைத்து விட்ட தியாகி லெப். கேணல் திலீபனின் ஆறாம் ஆண்டு நிறைவு நிகழ்வுகளின் இறுதி நாளான இன்று வட தமிழீழமெங்கும் உணர்வெழுச்சியுடனான அஞ்சலி நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

யாழ். குடாநாட்டில் மட்டுகளிலும் தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ் குடாநாட்டில் இன்று கோட்டரீதியாக அடையாள உண்ணாவிரதம், மற்றும் டங்கள் நடைபெறவுள்ளன.

இவற்றைவிட குடாநாட்டில் இன்றைய அஞ்சலி நிகழ்வின் போதும் பல இடங்களில் பறவைக் காவடிகளும் ஊர்திப் பவனிகளும் நடைபெறவுள்ளன.

மென்மேலும் அலங்கார வேலைகளில் மக்கள் ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இன்று விடுமுறை தினமாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# திருமலை மாணவரை படையில்சேரவற்புறுத்து

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் மாணவர்களை இராணுவத்தில் சேர்க்குமாறு பெற்றோரை சிறிலங்கா இராணுவத்தினர் வற்புறுத்தி வருகின்றனர்.

நேற்று முன்தினம் திருமலை மாவட்டம் கருக்கமுனை விநாயகபுரம் பகுதிகளை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் கருக்காமுனை மக்களை அப்பகுதி பாடசாலை ஒன்றிற்கு அழைத்துச் சென்றனர்,

அங்கு வைத்து "14 வயதுக்கு மேற்பட்ட உங்கள் ஆண், பெண் பிள்ளைகளை எமது இராணுவத்தில் சேருங்கள்" என வற்புறுத்திக் கூறினர். இதனால் வெருகல், ஈச்சிலம்பற்றை பிரதேச மக்கள் பெரும் பீதியடைந்துள்ளனர்.

## யாழ் நிலைமை குறித்து ஜனாதிபதிக்கு விளக்கம்

[கொழும்பு]

யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலை குறித்தும் தற்போது மேற்கொள்ளப் பட்டுவரும் அத்தியாவசிய சேவைகள் குறித்தும் யாழ். அரச அதிபருக்கும் ஜனாதிபதிக்குமிடையில் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டுள்ளன.

கொழும்பில் அரச அதிபர் தங்கியிருந்த சமயம் இப் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. யாழ் குடாநாட்டின் மீது அடிக்கடி நடாத்தப்பட்டு வரும் விமானத் தாக்குதல் மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் குறித்தும் இவ்வாறான தாக்குதல்களில் பொது மக்கள் பலர் கொல்லப்படுவதும், காயமடைவதும் வழமையாகிவிட்டது என்பது குறித்தும் யாழ். அரச அதிபர் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தார். மேலும் அண்மைக்கால இராணுவத் தாக்குதல்களினால் ஆலயங்களுக்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான புகைப்படங்கள் சிலவும் ஜனாதிபதிக்கு காண்பிக்கப்பட்டன. குறிப்பாக சேதமடைந்த தெல்லிப்பளை துர்க்கை அம்மன், பறாளாய் முருகன் ஆலயம் ஆகிய வற்றின் புகைப் படங்கள் இவ்

[5ஆம் பக்கம் பார்க்க]

## 20 கொலரா நோயாளிகள் நேற்று ஆஸ்பத்திரியில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

வாந்திபேதி [ கொலரா ] நோய்க்கிலக்கானவர்கள் என சந்தேகிக்கப்படும் மேலும் 20 நோயாளிகள் நேற்று யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை இந்நோய்க்கிலக்கானவர்களெனசந்தேகிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப் பட்ட நோயாளிகள் சிகிச்சையின் பின் குணமடைந்து சென்றுள்ளார்கள். வயிற்றோட்ட நோயென சிகிச்சைக்கு வரும்நோயாளிகள் அனைவருக்கும் தனியான வார்ட்டுகளில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருவது தெரிந்ததே.

### பாராளுமன்றத் தெரிவுக்குழு;

# இடைக்கால அறிக்கையில்; சமஷ்டிக்கு பரிந்துரையாம்

## அமைச்சர் ஹமீத் தெரிவிப்பு

(லண்டன்)

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையில் இலங்கைக்கு ஒரு சமஷ்டி ஆட்சி அமைப்பும், அதன் பகுதியாகத்தன்னாட்சிபெற்ற பகுதிகளும் அமைக்கலாம் எனப் பரிந்துரைக்கப்பட்டிருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் ஏ.சி எஸ். ஹமீத் தெரிவித்தார் விடுதலைப்புலிகளுடன் அரசு இன்னும் பேச தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

லண்டன் சென்றிருக்கும் அவர், நேற்றுக் காலை பி.பி.சி

(5ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாட்டிற்கு தேவையான உணவின் அளவைக் கணிக்க குழு

## அரசாங்கம் அமைத்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மட்டுப்படுத்தப்பட்ட அத்தியாவசிய சேவைகள் தொடர்பான நடவடிக்கைகளுக்காக யாழ். குடாநாட்டின் சனத்தொகை தொடர்பான அறிக்கை ஒன்றை அரசு கோரியுள்ளது.

யாழ். மாவட்டத்திற்கான பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் நிவாரண பொருள்கள் அனுப்பப்பட வேண்டிய அளவுகளை கணக்கீடு செய்யும் பொருட்டு சிறிலங்கா இராணுவத் தளபதி ஜெரி சில்வா தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்கஅதிபர் கா.மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்திற்கு அனுப்பப்படும் பொருள்களின் அளவு தேவையை விட அதிகமானது என இராணுவத்தினருக்கு சந்தேகம் எழுந்துள்ள

[5ஆம் பக்கம் பார்க்க]

விடுதலைப் புலிகள் வாழவேண்டும் என்றோ ஆளவேண்டுமென்றோ ஆசைகொள்ளவில்லை. எமது மக்களின் நிரந்தரமான, சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால் நாம் அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்.

- திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
யாழ். மாவட்டம்
(சி-7435)

# வரி விளம்பரம்

### தவறிவிட்டது

தி யோகேஸ்வரி 17 ராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு. யாழ்ப்பாணம் என்பவருடைய அடையாளஅட்டையும்குடும்ப அட்டையும் கல்வியங்காடு சந்தைப் பகுதியில் தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6097)

### சோதிடம்

உங்கள் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கும் நேரத்தில் சந்தியுங்கள் என்ஜோதிட, கைரேகை, ஜாதக ஜோதிடர் வேலணை V A. சிவராசா 152 B அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். (6101)

### தேவை

வெற்றுச் சோழித்தின் பக்கற்றுகள் விலைக்கு வாங்குகிறோம். ''மில்க்வைற்'' [சி-7470]

### வெளிவந்துவிட்டது

மாற்றம் சஞ்சிகையின் இதழ்; 04 (ஆடி - புரட்டாதி) ஈரப சிறுகதைமுரண்பாடுகள், கட்டுரைகள் துணுக்குகள் அடங்கி வெளிவந்துள்ளது. எங்கும் கிடைக்கும் ரூபா 10/- (6081)

### வாங்கப்படும்

பாவிக்கப்பட்ட பிளாஸ்ரிக் துப்புத்தடிகளின் நல்ல நிலையிலுள்ள பிளாஸ்ரிக் உறைகள் ரூபா 10 00 விலைப்படி தொகையாகவும் சில்லறையாகவும் வாங்கப்படும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: அந்திவானம் விற்பனை நிலையம் ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (சி- 7492]

### விற்பனைக்குண்டு

இங்கிலண்ட்பெற்றர் எஞ்சின் குதிரை இழுவை 3 RPM 2800 யின் சக்தி இழுவை 2. நேரில் தொடர்பு கொள்ளவும் S.S R அரிசி ஆலை டச்சு வீதி 1-ம் கட்டை, சாவகச்சேரி (6084)

### நீமோல் கிருமி நாசினி

மலசல கூடங்கள். கழிவு நீரோடும் வாய்க்கால்களில் நீமோல் பாவித்து கொலரா, மலேரியா நோய்க்கிருமிகளிலிருந்து பாதுகாப்புத் தேடுங்கள் போத்தல் விலை ரூ 70/- அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது ''மில்க்வைற்'' (சி-7496)

### மிருதங்கம்

இரண்டு நாட்களுக்குள் மிருதங்கம் சுத்தமாக சாதம் போட்டுக் கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் பெருமாள் கோயிலடி யாழ்ப்பாணம். (6088)

## 'குமாரி'' புறப்பட்டது

[வடமராட்சி]

கொழும்புத்துறை முகத்திலிருந்து 'குமாரி' கப்பல் ஒரு தொகை அத்தியாவசியப் பொருள்களுடன் பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கி நேற்று முன்தினம் புறப்பட்டது இக்கப்பல் நாளை திங்கட்கிழமை இத்துறை முகத்தை வந்தடையுமென எதிர்பார்க்கப் படுகிறது.

காங்கேசன்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் 'மரினா'' கப்பல் ஓரிரு தினங்களில் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து சேரும்.

பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற 'குமண'' கப்பல் சுமார் நூறு பேருடன் நேற்று முன்தினம் மாலை திருகோணமலை நோக்கி புறப்பட்டது இக்கப்பல் இன்று இத்துறை முகத்திற்கு வந்து மீண்டும் இன்றே கொழும்பு நோக்கிப் புறப்படும். (யோ)

## தியாக தீபத்தின் 6-ம் ஆண்டு நிறைவு நாள்



வெல்லரிய வீரவேங்கையாய் நின்றாய்பின்
சொல்லரிய தியாகதீபமாய் மலர்ந்தாயே
நல்லைநகர் வீதியிலே நாமூன்று நாள்கிடந்து
வெல்லுதமிழன் புகழ் வானோங்கச் செய்தாயே.

தார்மீகம் நமதென்று தலைநிமிர்ந்து நின்றவரை
தார்மீகம் கேட்டு தலைகுனிய வைத்தவனே
வீரநீ வாய்திறந்தால் விண்ணுலகு தானதிரும்
பாரார் கதறிஅழ பாடையிலே படுத்தாயே.

ஆறாண்டு போனதடா ஆகுதியாய் நீசமைந்து
நூறாண்டு போனாலும் நீவாழ்வாய் எம்நெஞ்சில்
நீமாறு நெருப்பாக சிரகடா நம்படை
வீறுகொண்டு நாமெழுந்தால் மலருமிங்கே தமிழீழம்.

- யாழ். மாநகரசபை ஊழியர்
நலன்புரிச் சங்கம்

(6087)

## திலீபண்ணாவே!

### உன் கனவு நனவாகிக் கொண்டிருக்கின்றது

காணும் இடமெல்லாம் திலீபனின் உருவம்
கேட்கும் ஒலியெல்லாம் திலீபனின் நாமம்
திரும்பும் திசையெல்லாம் திலீபனின் ஆலயங்கள்
எழுச்சி பெற்ற மக்களெல்லாம் திலீபனின் பாதையில்

தேசங்கள் ஓயலாம்; தாகங்கள் ஓய்வதில்லையென
சாதித்தவனே — நீ சாகவில்லைத் திலீபா!
மக்களை வதைக்கவந்த பாரதப்படையின் முகமூடி கிழிக்க
நீ ஒரு கொட்டிலிலே மரிக்கவில்லை — இன்று
மக்கள் புரட்சி வெடித்திட; சுதந்திர தமிழீழம் மலர்ந்திட
கோடிக்கணக்கான கொட்டில்களிலே ஜனித்துவிட்டாயே
திலீபா!

உன் அறைகூவல்கள் எங்கள் உள்ளங்களில்
ஆழப் பதிந்துவிட்டன. அந்நிய நாடெங்கும்
அகதியெனவும், அடிமையெனவும் அலையமாட்டோம்
அடிப்பவன் வீட்டில் (கொழும்பில்) அடைக்கலம் தேடிடமாட்டோம்!

உன் கனவு நனவாகிக் கொண்டிருக்கின்றது
திலீபண்ணாவே!
நாங்கள் அணிதிரள்கின்றோம் தலைவனின் பாதையில்.

## கைதடி அகதிமுகாமில் வாந்திபேதி நோய்

(தென்மராட்சி)

கைதடி அகதி முகாமில் வாந்திபேதி நோய் தீவிரமாகப் பரவி வருகிறது இந்த வாரத்தில் மட்டும பத்துக்கும் அதிகமானோர் இம் முகாமில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப் பகுதியில் வாந்தி பேதி நோயால் பாதிக்கப்பட்ட தம்பிமுத்து ரதி (27) செ சதானந்தன் (37) ஆகியோர் புதன், வியாழக்கிழமைகளில் யாழ்ப்பாணம் மருத்துவ மனையிலும் பி வில்டன் (24) சாவகச்சேரி மருத்துவ மனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (86,

## 5-ம் ஆண்டு நினைவலைகள்

### வீரவேங்கை "வைத்தி"

[செந்திவேல் தேசிங்கராஜா]

(நாவலடி ஒழுங்கை - மயிலிட்டி)

| பிறப்பு: | வீரச்சாவு: |
| --- | --- |
| 02-06-1868 | 26-09-1888 |

முள்ளைத்தீவு மாவட்டம் அலம்பில் என்னுமிடத்தில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் அருந்தி வீரச்சாவு அடைந்தாய்!

அதன்பின்;

நாட்டுப்பற்றாளரான உன் அன்னை [செந்திவேல் லலிதாங்கி] ''செல்வம் அக்கா'' தேசத்துரோகக் கும்பலினால் (E P R. L.F.) (29-06-89) கொலையுண்டாள் !!

பின்;

உன் உடன் பிறந்தவனும் '' வைத்தி '' ஆனான் !! தமிழீழம் மலரும் நாளில் நின் [நம்] மனையில் கொடி பறக்கும.

வி எம். வீதி, பருத்தித்துறை. — என்றும் உன்னை மறவாத அன்புச் சகோதர, சகோதரி.

[சி-7491]

## நினைவு கூருகின்றோம் ... 1993-09-26

1987ஆம் ஆண்டு இந்திய அரசிடம் ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து யாழ்- நல்லூர் ஆலய வீதியில் நீராகாரமும் அருந்தாது உண்ணாவிரதமிருந்து பன்னிரண்டாம் நாளான இதே தினத்தில் வீரச்சாவெய்திய- யாழ் மாவட்ட அரசியல் பிரிவுப் பொறுப்பாளர்-

**லெப். கேணல் திலீபன்** (இராசையா பார்த்தீபன் - திலீபன் வீதி. ஊரெழு, சுன்னாகம் - யாழ்)

இதே தினத்தில் தேசவிரோதசக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

**அமலதாஸ்** (நாகமுத்து மகேஸ்வரன் - செம்மலை. அளம்பில் - மணலாறு)

1988ஆம் ஆண்டு மணலாறு - அலம்பில் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**வைத்தி** (செந்திவேல் தேசிங்கராஜா - வீரமாணிக்க

## பாராட்டு விழா

கோண்டாவில் கிழக்கு வல்லீபுரநாதர் தேவஸ்தானத்தில் 17-09-93அன்று ஆரம்பமான மஹோற்சவத்தின்போது ஆரம்பமான

ஸ்ரீமகாபக்த விஜய என்ற விடயம் பற்றி தொடர் சொற்பொழிவு ஆற்றிய மால்டேயச் செல்வன் திரு எஸ். கே. என் தவராசா அவர்கள்

நுண்கலை பீடம் யாழ் பல்கலைக்கழகம்

தேவஸ்தான சபையினரால் பொன்னாடை போர்த்திப் பாராட்டப்படுவார்கள்.

இடம்:- தேவஸ்தான மண்டபம்

காலம்: 26-09-1993 ஞாயிறு (இன்று)
மாலை 6 30 மணி



பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பவர்
திரு. ஆ. மகாலிங்கம்
(தலைவர் இந்துப்பேரவை)
ஆசியுரை சிவநெறித்தொண்டன்
திரு. செ. சத்தியமூர்த்தி. ஆசிரியர் அவர்கள்

(6096) ஆலய பரிபாலன சபை.
கோண்டாவில் கிழக்கு.

## உன்தோழர்கள் களமாடி வருகின்றார்கள்



பார் அண்டப் புகழ் பரட்பி – புலி
யார் என்று உணரவைத்து – பசிக்
கோரத்தால் உயிரீந்த
பார்த்தீபா!
பார் இசுதீவை!
கேள் ஓர் தீர்வை!
போர் கொண்டு வெறியர்கள்
யாரென்றும் பாராமல்
நார் போலாக்கின்றார் எம்மை
"ஆட்டிலறி" கண்டும் அஞ்சாத எம்வீரர்
நாட்டினைக்காக்க நாளெலலாம் நடக்கின்றார்!
ஏட்டிலிதுவரை ஏறிடா வீரம் சமைத்தனர்!
கோட்டை மதிலிலும் கொடிகட்டி மகிழ்ந்தனர்.
இவையெல்லாம்....
விண்ணண்ட, நீயிருந்து வியப்புடன் பார்த்திருப்பாய்!
"கண்"ணன்ற உன் தோழர் களமாடி வருகின்றார்.

**விதுரா ஆடையகம்** இல. 34, நவீனசந்தை, யாழ்.

[6094]

---

**ரிஷி ஆடை மாளிகை**
**வல்வெட்டித்துறை**

**ஸ்ரீ வாணி அச்சகம்,**
தேவன் குறிச்சி, சமரபாகு,
உடுப்பிட்டி.

(6082)

---

### தியாகி லெப். கேணல் திலீபன்
## 6-ம் ஆண்டு நினைவாக...
### தியாகி திலீபனின் அறைகூவல்



"நான் என் உயிரிலும் மேலாக நேசிக்கும் மக்களே!
உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல்கின்றேன்
நீங்கள் அனைவரும் பரிபூரணமாக கிளர்ந்தெழ வேண்டும்
இங்கு ஒரு மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்"

தமிழ்பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கம்,
பருத்தித்துறை சாலை,
வ பி. போ. சபை.

(6089)

---

போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**வைத்தி** (செந்திவேல் தேசிங்கராஜா - வீரமாணிக்க தேவன்துறை, மயிலிட்டி - யாழ்)

கிளிநொச்சி இராமநாதபுரத்தில் கண்ணிவெடி வைக்கும் போது எதிர்பாராத வெடிவிபத்தில் எமைப் பிரிந்த-

**சிவம்** (வேகாவனம் மாலிகரன் - ஜோல்லர்புளியங்குளம் - மாங்குளம்)

திருமலை - சலப்பையாற்றுப் பகுதியில் இந்தியப் படையினர் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**மேஜர் சுரேந்திரன்** (காளிராசா சிறிபாஸ்கர் - 3-ம்கட்டை, உப்புவெளி - திருமலை)

தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட ஆதரவாளரான-

**செல்லையா யோசப்** (செல்வபுரம் - முல்லைத்தீவு)

1990ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கேதீஸ்** (பாலகிருஷ்ணன் சந்திரகாந்தன்- வட்டக்கச்சி- கிளிநொச்சி)

யாழ் - கோட்டை சிறிலங்கா இராணுவ முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**2 ம் லெப். சிரிவியா** (யூடினா பகீரதகுமார் - மருத்துவமனை வீதி - மன்னார்)

**லெப். நகுலன்/நேசன்** (இராசதுரை சிவனேசராசா - வத்திராயன் வடக்கு- தாளையடி)

**ரகு** (இராசசிங்கம் றொபேட் சாந்தகுமார் – கட்டுடை, மானிப்பாய்- யாழ்)

அம்பாறை - விநாயகபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டு பின்னர் தமிழீழக் கடலோரம் சடலங்களாகக் கரை ஒதுங்கிய 03 தமிழர்கள்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஏறாவூர், ஐயங்கேணியைச் சேர்ந்த 02 தமிழிளைஞர்கள்.

1992ஆம் ஆண்டு மட்டு - அம்பிளாந்துறையில் சிறிலங்கா இராணுவத்தினரும், தேசவிரோதிகளும் சேர்ந்து சுற்றிவளைத்துத் தாக்கியபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**சிவா** (நாகமணி சிவச்சந்திரராஜா - கோட்டைக்கல்லாறு - மட்டு)

**கிருபாரதன்/கிருபாகரன்** (கதிர்காமத்தம்பி சந்திரகுமார்- களுவாஞ்சிக்குடி - மட்டு)

இதே சம்பவத்தின்போது சுடப்பட்டு பலியான -

**தயாளன்** [ — — ஆரையம்பதி - மட்டு]

பூநகரி - ஆலடியில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப். முதுவழுதி** (ஆறுமுகம் கோணேஸ்வரன் - கோவில் புளியங்குளம் - வவுனியா)

**லெப். கலையின்பன்** (தியாகராஜாக்குருக்கள் இராமையா அம்பலை - பருத்தித்துறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-7488]

# உயிரினும் மேலான எமது உரிமை, சுதந்திரம் கௌரவம்

எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதங்களையும் தியாகங்களையும் புரிந்திருக்கிறது. வீரகாவியங்களைப் படைத்திருக்கிறது. அர்ப்பணிப்புகளைச் செய்திருக்கிறது. இவை எல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீரசாதனைகள். ஆனால், எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது; வியக்கத்தக்கது. எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது; சாத்வீகப் போராட்டக்களத்தில் தன்னைப் பலிகொடுத்து ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தை திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி. தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி தமிழீழத்தேசிய ஆன்மாவை தட்டியெழுப்பிய நிகழ்ச்சி. பாரத நாட்டை தலை குனியவைத்த நிகழ்ச்சி. உலகத்தின் மனச்சாட்சியை சீண்டி விட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தம் என்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக மக்கள் எல்லோரையுமே எழுச்சி கொள்ளச் செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது? திலீபன் உங்களிற்காக இறந்தான். உங்கள் உரிமைக்காக இறந்தான். உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் சுதந்திரத்திற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான். தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணிற்காக ஒருவன் எத்தனையோ உயர்ந்த உன்னத தியாகத்தை செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத் தான் அவன் செய்திருக்கிறான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன் ஆனால் ஓர் உயிரினும் உன்னதமானது எமது உரிமை. எமது சுதந்திரம், எமது கௌரவம்.

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன் உறுதிவாய்ந்த ஓர் இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவு கடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடி துடித்து செத்துக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம் என் ஆன்மா கலங்கும். ஆனால் நான் திலீபனை ஒரு சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக் கொண்டிருக்கும் ஓர் இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன். அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக்கொண்டான் அவன் உண்மையில் சாகவில்லை. காலத்தால் சாகாத வரலாற்றுப் புருசனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலைதெரிவித்திருக்கிறது. இது அர்த்தமற்ற சாவு என இந்தியத் தூதர் கூறி இருக்கிறார். தமது உறுதிமொழிகளை நம்பி இருந்தால் திலீபன் உயிர்தப்பி இருப்பார் என்று சொல்லி இருக்கிறார். ஆனால் உண்மையில் நடந்தது என்ன? நடந்து கொண்டிருப்பது என்ன? எப்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

எமது உரிமைகள் வழங்கப்படும் எமது மக்களிற்கும் எமது மண்ணிற்கும் பாதுகாப்பு அளிக்கப்படும் தமிழ் மக்கள் தமது பாரம்பரிய தாய்ப் பூமியில் தம்மைத்தாமே ஆளும் வாய்ப்பு அளிக்கப்படும் இப்படி எல்லாம் பாரத அரசு எமக்கு அளித்த வாக்குறுதிகளை நம்பி நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம். எமது மக்களினதும் மண்ணினதும் பாதுகாப்பை இந்தியாவுக்கு பொறுப்பளித்தோம்.

இதனை அடுத்து என்ன நடைபெற்றது என்பதெல்லாம் எனது மக்களாகிய உங்களிற்குத் தெரியும்

தமிழ் அகதிகள் தமது சொந்தக் கிராமங்களிற்குச் செல்லமுடியாது முகாம்களிற்குள் முடங்கிக்கிடக்க சிங்களக் குடியேற்றம் துரித கதியில் தமிழ் மண்ணை கபளீகரம் செய்தது சிங்கள அரசின் பொலிஸ் நிர்வாகம் தமிழ்ப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டது அவசர அவசரமாக சிங்கள இனவாத அரச இயந்திரம் தமிழ்ப்பகுதிகளில் ஊடுருவியது சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில் சமாதானப் படையின் அனுசரணையுடன் சிங்கள அரச ஆதிக்கம் தமிழீழத்தில் நிலைகொள்ள முயன்றது இந்த பேராபத்தை உணர்ந்து கொண்ட திலீபன் இதற்கு ஏற்ற ஒரு முற்றுப் புள்ளிகாண திடசங்கற்பம் கொண்டான்.

சிங்கள அரசுடன் உரிமை கோரிப் போராடுவதில் அர்த்தமில்லை. பாரதம் தான் எமது இனப் பிரச்சினையில் தலை இட்டது. பாரதம்தான் எமது மக்களின் உரிமைக்கு உத்தரவாதம் அளித்தது பாரதம் தான் எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது. பாரதம் தான் எமது ஆயுதபோராட்டத்தை நிறுத்தி வைத்தது. ஆகவே பாரத அரசிடம் தான் நாம் உரிமை கோரிப் போராட வேண்டும். எனவேதான் பாரதத்துடன் தர்ம யுத்தம் ஒன்றைத் தொடுத்தான் திலீபன். அதோடு பாரதத்தின் ஆன்மீக மரபில் பெறப்பட்ட அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக் கொண்டான்.

நீராகாரம் கூட அருந்தாது மரண நோன்பை திலீபன் தழுவிக் கொள்வதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னரே நாம் இந்தியத் தூதுவர் திரு டிக்சித்திற்கு முன்னறிவித்தல் கொடுத்தோம். உண்ணாவிரதம் ஆரம்பமாகி 8 நாட்கள் வரை ஒன்றும் நடைபெறவில்லை. பதிலிற்கு இந்திய அரசு ஆதிக்கத்தின்கீழ் உள்ள தொடர்பு சாதனங்கள், குறிப்பாக அகில இந்திய வானொலி எம் மீது விசமத்தனமான பொய்ப் பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்டது. திலீபன் உண்ணாவிரதத்தை மிகவும் கேவலமாக கொச்சைப்படுத்தியது. 9ஆவது நாள் இந்தியத்தூதர் இங்கு வந்தார். உருப்படி இல்லாத உறுதி மொழிகளைத் தந்தார். வெறும் உறுதி மொழிகளை நம்பி எமது இனம் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறது உருப்படியான திட்டங்களை முன் வையுங்கள் எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வையுங்கள் அதுவரை உண்ணாவிரதம் கைவிடப்பட மாட்டாது என்றேன். உங்களிற்கு திலீபனது உயிரில் அக்கறை இருந்தால், நீங்கள் அவனை வந்து பாருங்கள். எமது மக்களிற்கு முன்பாக அவனிடம் உறுதி மொழிகளைக் கூறுங்கள் நாம் உண்ணாவிரதத்தை வாபஸ் பெறுகிறோம் என்றேன். அதற்கு இந்தியத்தூதுவர் மறுத்துவிட்டார்.

எனது அன்பான மக்களே! இந்திய அரசு எமது நியாயமான கோரிக்கைகளை புரிந்து காலம் தாழ்த்தாது உருப்படியான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் திலீபன் உயிர் பிழைத்திருப்பான். இன்னமும் இந்திய அரசு எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் காலந்தாழ்த்தி வருகிறது. நாம் கேட்டுக் கொண்டபடி ஓர் இடைக்கால அரசை நிறுவி இன்று எமது மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் சிரத்தை காட்டுவதை விடுத்து எமக்கு நிபந்தனைகளை விதிக்கிறது எம்மோடு கலந்தாலோசிக்காத ஓர் ஒப்பந்தத்திற்கு எமது அங்கீகாரம் கேட்கிறது. இப்போது ஆயுதங்கள் ஒப்படைப்புப் பற்றிப் பேசுகிறது. போராட்டத்தை கைவிடச் சொல்கிறது.

நாம் உருப்படியான செயல்முறைத் திட்டங்களைக் கேட்க இந்தியா உறுதிமொழி தருகிறது. நாம் விளக்கங்களைக் கேட்க இந்தியா கால அவகாசம் கேட்கிறது. நாம் கோரிக்கைகளை முன்வைக்க இந்தியா நிபந்தனைகளைப் போடுகிறது. இந்த சூழ் நிலையில் நாம் போராட்டத்தைக் கைவிட முடியாது. மாறாக போராட்டத்தை தீவிரப்படுத்த வேண்டும். தமிழீழ மக்களின் ஒன்றுபட்ட தேசியஎழுச்சியாக எமது போராட்டம் புரட்சி வடிவம் பெற வேண்டும்.

முல்லைத்தீவு, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் விடுதலைப்புலி வீரர்கள் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கிறார்கள். வடக்கு, கிழக்கு அடங்கிலும் உள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் இந்த சாத்வீகப் போராட்டத்தில் அணிதிரள வேண்டும். மக்களின் ஒன்று திரண்ட சக்தி மூலமே மக்களின் ஒருமுகப்பட்ட எழுச்சி மூலமே நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கலாம். திலீபனின் ஈடு இணையற்ற தியாகத்திற்கு நாம் செய்யும் பங்களிப்பு இது தான்.



26-9-87இல் திலீபன் தியாகமடைந்தார். தியாக திலீபம் அணைந்ததை யொட்டி தலைவர் வே. பிரபாகரன் வெளியிட்ட அறிக்கையினை இங்கே தருகிறோம். இவ் அறிக்கை தமிழீழ மக்களுக்கு பலவிடயங்களைத் தெளிவுபடுத்தியது மக்களைப் போராட்டத்திற்கு அணிதிரள வைக்கும் அறைகூவலாக விளங்கியது.

# லெப். கேணல் தியாகி திலீபன்;
# தனக்குவமையில்லா தற்கொடையாளன்

"போராடத் தயாராகுங்கள்: எனக்கு விடை தாருங்கள்" இது தியாகி லெப். கேணல் திலீபன் நல்லூர் ஆலய முன்றலிலே தனக்கு முன்பாக கூடியிருந்த மக்களிடையே மூன்றாவது முறையாக உரை நிகழ்த்தியபோது குறிப்பிட்ட ஒரு வாசகம் ஆகும்.

எதற்காக இந்தப் போராட்டம்? அற்ப சொற்ப சலுகைகளைப் பெறுவதற்காகவா? அல்லது ஒரு சிலரின் பதவி மோகத்திற்கு தீனி போடுவதற்காகவா? அல்லது மொழி உரிமை என்றும், வேலைவாய்ப்பு உரிமை என்றும் பம்மாத்துக் காட்டுவதற்காகவா? இல்லை தமிழ் மக்கள் தமது தாயகத்தை வென்றெடுப்பதற்காக - முந்நூறு ஆண்டுகளின் முன்பு பறிகொடுத்த இறைமையையும் - சுதந்திரத்தையும் மீட்டெடுப்பதற்காக என்பதை திலீபன் ஆழமாகவே உணர்ந்திருந்தான். அதனால் தான்;

"இந்த யாழ்ப்பாணக் கோட்டை இருக்கும் இடத்தில் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழனின் கொடி பறந்தது. அந்தக் கொடியை போர்த்துக்கேயர் பறித்து எடுத்தனர், போர்த்துக்கேயரிடமிருந்து டச்சுக்காரரும், டச்சுக்காரரிடம் இருந்து ஆங்கிலேயரும் கைப்பற்றிக் கொண்டனர்; கடைசியில் ஆங்கிலேயரிடமிருந்து சிங்களவர் அபகரித்துக் கொண்டனர். இந்தக் கோட்டையிலே மீண்டும் தமிழரின் கொடி-புலிக்கொடி பறக்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை. அந்த தமிழ்க் கொடியை பறக்க விடுவதற்காக ஒவ்வொருவரும் எமது உயிரை அர்ப்பணித்துக் கொண்டு வருகின்றோம். இதில் என்பங்கு எப்போது என்பது தான் எமது கேள்வியாக இருக்க வேண்டுமேதவிர, பதவிகள் எமக்குப் பெரிதல்ல. பதவிகளைத் தேடிச் செல்பவர்கள் புலிகள் அல்ல" என்று அவன் முழக்கமிட முடிந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நிமிர்ந்த பனைமரங்களால் நிறைந்திருந்த செம்மண் பூமியான ஊரெழுவில் இராஜசயா - பர்வதபத்தினி தம்பதிகளுக்குக் கடைசிப்பிள்ளையாக பார்த்திபன் இம்மண்ணுக்கு அறிமுகமானான். பிறந்த பத்து மாதத்தில் தாயை இழந்தவன் அவன். ஆனால், பிறப்பதற்கு முன்பாகவே இழந்து விட்டிருந்த தாயகத்தின் மீதான பாசமே அவனை உருவாக்கி வளர்த்தது. எனக்கு இன்னும் பசுமையாக இருக்கின்றது. படிப்பில் பார்த்திபன் மேன்மையானவன். ஒழுக்கமும் கட்டுப்பாடும் அவனிடம் நிறைந்திருந்தது. நான் சந்தித்த மாணவர்களில் அவன் வேறுபட்டவன். அவன் ஒரு தனி ஆற்றல் படைத்தவன்" என்று அவனது பாடசாலை ஆசிரியர் ஒருவர் அவனது பள்ளிக்காலம் பற்றி நினைவு கூர்ந்திருப்பது இங்கு சுட்டிக் காட்டப்படத் தக்கதாகும்.

அரசியல் உரிமைக்கான போராட்டம் என்பது மேடைப் பேச்சுக்களாக மட்டும் இழுபட்டுக் கொண்டிருந்த காலத்தில் - அதற்குப் புறம்பாக காட்டிடையே முகாம்கள் அமைத்து - தாயகக் கொடி பறக்கும் காலத்தை கட்டியெழுப்ப அத்திவாரமிட்ட ஒப்பற்ற தலைவர் பிரபாகரனையும். அவரது தலைமையிலான அணியினரையும் இனம் கண்டு கொண்ட பார்த்திபன் தன்னையும் இணைத்துக் கொண்டு திலீபன் என்றொரு திருநாமம் பெற்றான்.

அடையாளம் தெரியாத எந்த மனிதனும் சிறிலங்கா அரசின் உளவாளியாக இருப்பானோ என்று அச்சம் நிலவிய ஒரு சூழலில் தான் குறுகிய ஒற்றையடிப் பாதைகளுக்கு ஊடாகக்கூட அவனது பயணம் தொடர்ந்தது மிதிவண்டியில் சிட்டாகப் பறந்து திரிந்த அவன் மாணவர்கள்- உழவர்கள் - தொழிலாளர்கள் எனப் பலதிறப்பட்டவர்களையும் சந்தித்தான். போராட்ட கருத்து விதைகளை அவர்களது நெஞ்சங்களில் ஊன்றி விதைத்தான். திலீபனின் பேச்சில் அழுத்தம் இருக்கும். எடுத்த பொருளை சிந்தனையில் இருத்துவதற்காக திரும்பத் திரும்பக் கூறுவான் செவிகளில் விழும் சொற்கள் நெஞ்சில் பதியும் வகையில் அவனது உரையாடல் அமையும் "ஆற்றல் இல்லாதவர் என்று எவரும் இல்லை. அந்த ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில் நாம் முயற்சியில் இறங்க வேண்டும் என்பது தான் உண்மை" என்பதை அடிக்கடி வலியுறுத்தும் அவன் ஒவ்வொருவரையும் செயலுக்கு உந்திச் செல்வதில் ஒவ்வொருவரையும் செயற்படத் தூண்டி விடுவதில் - மிகவும் சாமர்த்தியசாலி.

1984ஆம் ஆண்டில் அரசியல் பொறுப்பு அவனது தோளில் வைக்கப்பட்டது 21வதுவயது இளைஞர் ஆயிற்றே இந்தச் சின்ன வயதில் இந்தப் பாரிய பொறுப்பை இவன் நிறைவேற்றுவானா என்று புருவத்தை உயர்த்தியவர்கள் பலர் அப்போது இருந்தனர். ஆனால் இதயத்தில் தாயக விடுதலை என்னும் கனல் மூண்டு எரிய இலட்சியத் தீயை வளர்த்து அதற்கே தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து அவன் செயற்படத் தொடங்கிய சில நாட்களிலேயே தலைவரின் தெரிவு சரியானது தான் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர். அடிவானில் விடிவெள்ளி தெரியும் வேளையில் துயில் கலையும் திலீபனுக்கு நள்ளிரவு தாண்டும் வரையில் ஓய்வு ஒழிச்சல் இருக்காது. ஆடம்பரங்கள் மட்டுமல்ல அன்னம், தண்ணி, ஆகாரம் கூட இரண்டாம் பட்சமாகத்தான் இருந்தது அவனுக்கு. திலீபனின் போர்க்களச் சாதனைகள் பல விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக ஈட்டிய பல வெற்றிகளிலும் அவனுக்குப் பங்கு இருந்தது எனபதும், முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்கும் இராணுவம் வீதிகளில் தலைகாட்ட முற்படுகிறது என்ற செய்தி எந்தமூலையிலிருந்து கிடைத்தாலும்



மோதலின் முனையில் துப்பாக்கியும் கையுமாக திலீபன் நிற்பதும் வழமையானதொன்று.

தமிழர்கள் நடத்திய தாயக விடுதலைக்கான போராட்டம் தீர்க்கமானதொரு கட்டத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தபோதுதான் இந்திய அரசின் முன் சிறிலங்காவின் மண்டியிடலும் - இந்திய அரசின் நம்பிக்கைத் துரோகமும் அரங்கேறின. சிறிலங்காவும், இந்தியாவும் தமக்கிடையே செய்து கொண்ட ஒப்பந்தத்தால் தமிழீழ விடுதலைப் போருக்குக் குழிபறிக்க முற்பட்டபோது குமுறிய நெஞ்சங்களின் சின்னமாக திலீபன் விளங்கினான். சிறிலங்கா அரசின் திட்டமிட்ட சதிச்செயலுக்கு இந்திய அரசு ஒத்து ஊதுகின்றது என்ற உண்மையை எமது மக்களுக்கு மட்டுமன்றி அகிலம் முழுமைக்கும் அம்பலமாக்குவதற்காக அவன் போர் தொடுத்தான். காந்தியின் நாட்டிலிருந்து 'பூமாலை போட்டு' 'நேசக்கரம் நீட்டி' வந்தவர்களின் மோசச் செயல்களை உணர்த்துவதற்காக உண்ணாவிரதம் என்ற போர் ஆயுதத்தை அவன் தாங்கிக் கொண்டான். 'ஆயுதக் களைவு' செய்யவந்த இராணுவத்தால் இந்த ஆயுதத்தைப் பறித்து விட இயலவில்லை. போராடும் மக்களுக்கு துணிவும், தன்னம்பிக்கையும்தான் வலுமிக்க ஆயுதங்கள் என்பதை திலீபன் மீண்டுமொரு முறை உணர்த்தினான். அவன் சாகும்வரை நீராகாரமும் இன்றி உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்தபோது தமிழீழத்தைப் பெற்றுத் தாருங்கள் என்று இந்திய அரசை கோரவில்லை. ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் மண்ணிலிருந்து வெளியேறு என்று சிங்கள இராணுவத்தைக் கேட்கவில்லை. பதிலுக்கு தமிழ் மக்களுக்கு நன்மை செய்யப் போவதாக முழங்கிய ஒப்பந்தத்தின் அம்சங்களை அமுல்படுத்திக் காட்டுங்கள் என்றுதான் கேட்டான்.

சந்தேக நபர்களாகக் கைது செய்யப்பட்டு சிங்கள சிறைக் கொட்டடிகளில் வாடும் தமிழர்கள் ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஒன்றரை மாதத்தின் பின்பும் விடுவிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினான்.

ஒப்பந்தத்தில் கீழ் இடைக்கால அரசு அமைக்கப்படுவதை சிறிலங்கா அரசு வேண்டுமென்றே இழுத்தடிப்பு செய்வதை எடுத்துக் காட்டினான்.

சிங்கள குடியேற்றங்கள் வெள்ளமெனப்பாய்ந்து தமிழ் மண்ணைக் கொள்ளை கொள்கிறது என்ற அபாயத்தை அறிவித்தான்.

மீளக்குடியமர்த்தல், புனர்வாழ்வு என்ற சொற்களுக்குப் பின்னிற்கும் இனவாதச் சாயத்தை எடுத்துரைத்தான்.

பாடசாலைகள், படை வீடுகளாகுவதையும், ஊர்காவற் படைகள் புதிது புதிதாக முளை விடுவதையும் அவன் தெரியப் படுத்தினான்.

ஒப்பந்தத்தின் விதிகளுக்கு புறம்பாக இடம் பெறும் இந்த அடாவடித்தனங்களைக் கட்டுப்படுத்தும் படி அவன் கோரியதில் தவறு எதுவும் இருக்கவில்லை என்பதை பல்லாயிரக் கணக்கில் அணி திரண்ட மக்கள் ஆமோதித்தனர்.

"எனது இந்த அகிம்சை வழி அணுகுமுறையை இந்தியா புரிந்து கொள்ளாமலோ தூக்கி எறிந்துவிட்டோ போகலாம். அது பற்றிக் கவலையில்லை ஆனால் அதன் மூலமாக ஆவது இந்தியாவைப் பற்றி நமது மக்கள் புரிந்து கொள்வார்களேயானால் அதுவே எனக்கு மகிழ்ச்சி தருவதாகும்" என்றான் திலீபன். ஆனால், இந்தச் சத்திய சோதனையை கண்டுகொள்ள தயாராக இருக்கவில்லை இந்தியா. இந்தியாவின் வியப்பும், சிறிலங்காவின் தந்திரங்களும், கலந்த பிரசாரங்கள் காற்றலைகளில் கட்டவிழ்த்து விடப்பட்ட பன்னிரு தினங்களில் மக்களின் உணர்ச்சிகள் வான்வரை சென்று இடிக்கலாயிற்று.

அடுத்து வந்த இரண்டரை ஆண்டுகளிலும் இது நிரூபணமாயிற்று. ஒப்பரேஷன் பூமாலை என்று இம்மண்ணிற்குள் அத்துமீறிப் புகுந்தார்கள். ஒப்பரேஷன் வஜீர என்று முழங்கியபோதும் சரி, செக்மேற் எனப்பெயரிட்டு வன்னிக் காட்டுக்குள் புக முயன்றபோதும் சரி புயற்காற்றாக சுழன்று அடித்தபோதும் சரிஇந்த மண்ணும் மக்களும் இம்மியளவும் அசைந்து கொடுத்து விடவில்லை. அணியணியாக வந்து குவிந்த இந்தியப் படைகள் பின்னடைவுகளை மட்டுமே சந்தித்து தமது மூட்டை முடிச்சுகளுடன் வெளியேற வேண்டியதாயிற்று போராட்டத்தின் இன்றைய வளர்ச்சி நிலைக்கு மட்டுமல்ல எதிர்கால சுதந்திர தமிழீழத்திலும் ஆக்கிரமிப்பு எண்ணம் கொண்டுவரும் அந்நியர் எவரையும் சுட்டெரிக்கும் சுடராக

[5ஆம் பக்கம் பார்க்க]

## பேரெழுதி வைத்த பெரும்புலவன்!

ஊரெழுவில் தோன்றும் எரிமலை! சிங்களர்க்குப்
பேரழிவு செய்த பெரும்புயல், பாரதத்தின்
எண்ணத்தின் வீழ்ந்த இடியே நெம் மண்ணதிலே
புண்ணாக வந்த புலையர் குழுக்களை
வாரியே மூடுகின்ற வங்கக் கடலலை!
வீர வரலாற்றில் வெற்றிப் புலிகளைப்
பேரெழுதி வைத்த பெரும்புலவன் மண்மீட்புப்
போரினிலே சிறுத் புலியானான்; ஆனாலும்
மக்கள் மனங்களிலே மாங்கன்று மின்னலைமுன்
ஒக்கும் இடையார்க் கொளிநிலவு! பூந்தென்றல்!
பார்த்தீபன் என்றிந்தப் பாரிலுள்ளோர் கைகுவித்துப்
போற்றிப் புகழ்கின்ற பேரரே-நெம் மண்ணை

அடிமைப் படுத்தியே ஆளவந்தோர் செய்த
படு கொலைகள் கற்பழிப்புப் பாழ்பட்ட கொள்ளை
சிறைவைப் புறுப்பூறு தீவைப்பு மேலும்
முறையற்ற பிள்ளை பிடிப்புத்தான் எத்தனையோ?
கல்வியை வீழ்த்தி முன் கைத்தொழிலைச் சீரழித்துப்
பல்வகையாய் அல்லல் படுத்தி நின்றார், அந்நாளில்:

கொண்ட குறிக்காய்க் குடும்ப உறவுகளை
அண்டாமல் கையில் சுடுபொறியைத் தாங்கிநின்று
கண்விழித் தூணிநிறிக் காலமெல்லாம் காத்திருந்த
மன்னவனே உன்னை மறப்போமா? ஈழத்தில்
ஆட்சிபிடித் தெம்மை அழிக்கவந்த பாரதத்தின்
சூழ்ச்சி தொலைப்பனென்று சூளுரைத்தே பாரறிய
அற்றைத் தமிழ்மன்னர் ஆண்டிருந்த நல்லூராம்
கொற்றத் திருநகரக் கோயில்தன் வீதியிலே
நீருமருந் தாமல் நெருப்பதனை உள்வளர்த்துப்
ஈராறு நாட்கள் இருந்தவங்கள் தாமியற்றி
மூட்டும் புரட்சியது மூண்டெழுந் தீழமெங்கும்
காட்டுத்தீப் போலக் கனன்றெரியக் கண்டோமே

ஐயா திலீபனே அன்னை போல் காத்தவனே
வையவுன் மூச்சடங்கப் பார்த்தழாதோர்கள் யார்?
வானும் அழுதது வானத்தில் நின்றவொரு
கூனற் பிறையொடு மீனும் அழுதன;
புல்லும் அழுதன; வென்றும் அழாதசிறு
கல்லும் அழுதவே அன்னை மடியில்
குழவி அழுதன: எல்லாம் அழுமால்
அழாதது மற்றவீ வறமற்ற பாரதமே!
ஆனாலும் மானம் அழிந்தவரெம் மண்ணைவிட்டுப்
போனாலும் அந்நாளில் போலிகளாய் ஈழத்தில்
கால்விட் டெமது விடுதலையை தள்ளிவிட்டோர்
சீழ்கொட்டி இன்று சிதம்பி அழுகின்றார்.

பேச்சடங்கி மண்ணில் பிறர்வாழ நீயுயிர்த்த
மூச்சடங்கிப் போமுன் மொழிந்தநல் வாய்மைகளில்
கோட்டையில் எங்கள் கொடி பறக்கும் எமீழ
நாட்டில் புரட்சியொன்று நன்றே வெடிக்கு மென்றாய்
நீயுரைத்த வாய்மை நிறைவேறல் காணாயோ?
தாயகத்தை மீட்கத் தமிழிளையர் கூடிவிட்டார்
காவற்பிரபா கரனார்தம் கண்மணிகாள்
ஏவல் முடித்தீர் இனி நீங்கள் உம்மண்ணை
மண்மடியில் தூங்குங்கள் மற்றை மறவரெல்லாம்
உம்மடியில் செல்வர் உவந்து.

— வீ. பரந்தாமன்

## பேரொளியாய்த் திகழ்கின்றான்

போதனைகள் புரிபவர்கள் பலபேரைக் கண்டோம்
புரியாமற் செய்கின்றார் புதுமைதான் அந்தோ
நாமதனை இனங்கண்டு நல்லதனைக் கொண்டு
நமக்காக வாழ்கின்றோம் நம்மவரை நோக்கோம்
வேதனைகள் அனைத்தையுமே விலைகொண்டு பெற்று
விழுமியங்கள் நாட்டுக்காய் புரிந்தவர்கள் சிலபேர்
சாதனைகள் புரிந்தவர்கள் சகத்தினிலே உண்டு
சார்ந்தவரை நோக்கிப்பார் வரிசையிலே கண்டே

வில்லாலே சாதனைகள் புரிந்தவர்கள் சிலபேர்
வேல்கொண்டு சாதனைகள் புரிந்தவர்கள் சிலபேர்
சொல்லாலே சாதனைகள் புரிந்தவர்கள் பலபேர்
தொழுதுண்டு சாதனைகள் புரிந்தவர்கள் பலபேர்
எல்லோரும் சாதனைகள் புரிந்தார்கள் தமக்காய்
ஏற்கனவே நாட்டுக்காய்ச் சாதனைகள் செய்தோர்
சொல்லாரும் காந்திமகான் மண்டேலா திலீபன்
சோர்விலான் துணிவுடையான் தியாகத்தின் சின்னம்

யாரென்று நாடறியும் நாம் சொல்ல வேண்டாம்
நம்மவரை வழி நடத்த ஒளியாக நின்று
தீர்வொன்று காட்டியநற் தியாகியவன் திலீபன்
திசைகாட்டித் தமிழ் மக்கள் சந்ததிகள் வாழ
ஊரென்று ஊரெழுதான் ஊராகு மன்று
உண்மையிலே தமிழர் வாழ் ஊரெல்லாம் ஊராய்
பேர் பெற்றுத் தமிழ் மக்கள் நாடுற்று வாழ
பேரொளியாய் அவருடனே திகழ்கின்றான் அன்றோ.

- பண்டிதர் கந்தையா
மீசாலை



## அந்த நாள் தன்னை மீட்டு...

பல்லவி

நல்லை நகர் வீதிகளே!
நல்ல கவி பாடுங்களே!
கண்ணீரை எம்நெஞ்சில் எந்நாளும் வரவைக்கும்
அந்தநாள் தன்னை மீட்டு

(நல்லை)

சரணங்கள்

கானத்தைப் பாடுங்கள் பார்த்தீபனின் கதை
காவியத்தின் முதற் கருவாகும்
மானத்தை வாழ்வித்த மரணத்தின் ஓர்கதை
பாவினத்தில் என்றும் உருவாகும்
திலீபனே!......... தியாகியே!.........
திலீபனே எங்கள் மூச்சிலும் பேச்சிலும்
அன்றும் இன்றும் என்றும் நீதானே

(நல்லை)

தேசத்துக்காய் ஆவேசத்துடன் நின்று
பசிதன்னை சுமந்தானே
பாசத்தை நேசத்தை பக்கந்தனில் வைத்து
சாவில் புரட்சியைச் சமைத்தானே
இந்தியா?......... வந்தியா? .........
எம்மிலே பல இன்னல்கள் தந்தாயே
என்ன நன்மை தன்னை கண்டாயோ

(நல்லை)

பசியோடு உறவாடிப் பிரிவானாயே என்றும்
எங்கள் பசி உன்னை நினைவாக்கும்
கரிகாலன் காலத்தில் உருவாகித் திருவானாய்
உந்தன் இலக்கணம் எமையாக்கும்
கொஞ்சமா? ........ பஞ்சமா?.. ......
நெஞ்சிலே சிந்தும் சோகந்தான் என்றென்றும்
அள்ள அள்ள என்ன குறையாதோ?

(நல்லை)

— இளந்திரையன்

## தெரிகிறதா உனக்கு?

தரணி புகழ் பேசுமெம் மைந்தனே!
ஈழத்து மண்ணில் மையங் கொண்டவனே!
தீர்க்க தரிசியே திலீபா!
புயலின் புதிய வடிவில் விலை கூற விடுதலைக்கு
புறப்பட்டவன் நீ
தேகத்தை வருத்தியெம் தேசத்தை
காத்தவன் நீ
மக்கள் புரட்சி மூலம் எமக்கேன் மீட்சிக்கு
தயாராவோம் என்றவன் நீ
ஆதிக்கச் சின்னமழித்தே ஏற்றுவோம்
கோட்டையில் கொடி என்றவன் நீ
நாளைய சந்ததியின் திருத்த வாழ்விற்காய்
இன்றே நாட்டை சமைப்போமென்றவன் நீ
என் சந்ததியின் வாழ்வுதனை
விண்ணிலிருந்து பார்ப்பேன் என்றவன் நீ
அசுர வேகங் கொண்ட ஆதிக்கப் புயலுக்கு
ஆழம் பார்க்க கிடைத்தது ஈழம் தானா?
விலை பேச கிடைத்தது
வீரத்தின் விளைநிலம் தானா?
பேபஸ் பீரங்கி அல்லவே
ஈழம் விலை பேச
காலத்தை வென்றெம் தலைவன்
வானம் பார்த்து விடுதலைபயிர் விதைக்கவில்லையே
மானம் விற்றுப் போராடவில்லையே
தியாகியே திலீபா
நீ ஏற்றி வைத்த ஒளி விளக்கில்

## அண்ணலேஉனைப் போற்றுவோம்! திலீபா!!

பல்லவி

ஆண்டுகள் ஆறல்ல கோடிகள் கடந்தாலும்
அண்ணலே உனைப் போற்றுவோம் - திலீபா!
(ஆண்...)

அனுபல்லவி

உன்னுயிர்ச் சுடராலே அநீதியின் இருளோட்டி
ஆருமே துணியாத அரும்பெரும் செயல்செய்து
(ஆண்...)

சரணம்

உன்னத நோக்கத்தை உள்ளத்திலே கொண்டாய்!
ஊனுறக்கம் மறந்துன் உழைப்பதனைத் தந்தாய்!!
உன்மனக் கொள்கைக்காய் உடலுயிரைத் தந்தாய்!
உன்னதத் தியாகத்தால் உலகினையே வென்றாய்!!
(ஆண்...)

- சரவணன்

## தெருவெல்லாம் உன்னுருவம் தெரியுதடா!

நெருப்பில் இருந்து எழுந்துவந்த நிலவே - ஈழக்
கருப்பையில் பிறந்து கனன்றுவந்த கருங்குயிலே!
இருக்குமிடம் நீயெங்கே... சொல்லு.. சொல்லு.. - எம்
தெருவெல்லாம் உன்னுருவம் தெரியுதடா... நில்லு! நில்லு!


ஆயுதத்தை ஏந்திவந்த அருங்கரத்தில் 'அகிம்சை'யெனும்
ஆயுதத்தைத் தாங்கியுன்னை அழித்தது ஏன்?
பாயும் புலியாகிப் படைநடுங்கப் பறந்தபின்னே - இன்று
காயும் நிலவாகி எமதுநெஞ்சில்... கனிவது ஏன்?

பாண்போட வந்த பாதகரின் வலையினையே - வில்லின்
நாண்போலக் கிழித்தெறிந்து நிமிர்ந்து விட்டாய்
தூண்போலத் தாங்கியெமைப் பேணிய தூயவனே - நாம்
காண்கின்ற இடமெல்லாம் உன்னுருவம் கனல்வதைப் பார்!

செத்தாயா நீயங்கே?... இல்லை யில்லை - புது
வித்தாகவன்றோ எழுந்துவிட்டாய் வீதியெங்கும்?
கத்தும் குயிலாக எழுங்குரலில் உன்கனவின்
யுத்தம் புதுவுணர்வின் புனிதத்தைப் புரிகிறோம் நாம்!

ஏற்றிவைத்த உன்விளக்கை அணையாமல் பார்த்திடுவோம் — மண்ணில்
போற்றிநின்று உன்னுருவை நாம் துதிப்போம்!
காற்றிலெங்கும் துளிர்க்கின்ற கனவுதனை நாம்முடிப்போம்
காத்திரு நீ... வான்பரப்பில் கனியவைப்போம்; ஈழமதை!

— கவிஞர் மு. வே.யோ.வாஞ்சிநாதன்



## தூரிகை எடுத்தொரு பேரிகை

பாரதமே! - பார்த்திபன்முன்
போரெதற்காய் தொடுத்தாய்?
அசோகன் ஆண்ட தேசமே!
சோகம்ஏன் கொடுத்தாய்?
அயலவனாய் அரவணைக்க வந்தநீ
முயலகனாய்-அரக்கனாய்ஏன் நின்றாய்?
புயலாகப் பாய்ந்தவன்-பின்
கயலாகத் துடிக்கையில்ஏன் கொன்றாய்?

சின்னம் இரண்டிலும் சிங்கமே அங்கம்!
சிந்தியாமலும் நீ செய்யலாம் உங்களுக்குள் ஓர்(ப்)பந்தம்!
சிந்தியாது ஏந்துமா புலி வழிகாட்ட ஓர்பந்தம்!
சீறியெழுந்த தங்கம் தாங்கினானே வயிற்றில் பந்தம்.

வேடந்தாங்கலென வந்தாயே-புலியை
வேகவைத்தாயே!- இதுவா உன்வேட்கை?
வாடிவகைகளென வந்தாயே-விழியை
வாடவைத்தாயே! இதுவாஉன் வாடிக்கை?
நேசமகன் - எம்தேசமகன் திலீபனை - உடல்
நோக வைத்துத்தின்றாயே - இதுவா உன் நேசக்கை?
கோரிக்கை ஐந்து வைத்தவனை
கொன்று நின்றாயே - இதுவேஉன் கோரக்கை!

துரோகமே தூரநில்!
தூரிகை எடுதடுதொரு பேரிகை முழங்கிறேன்
பாக்கு நீரிணையையும் அது கடக்கும் ! - புலி
ஆக்குமே ஈழம்! அது நடக்கும்!!

— வள்ளுவன்

## இல்லையே எம் அருகில்

ஈராறு நாளாக...
அணிதிரண்ட மக்களின் முன்னிலையில்
நல்லூரான் வீதிதனில் உண்ணா நோன்பிருந்தாய்
இந்நிலை கண்ட மக்களின் கண்கலங்க வைத்தாய்
சின்னஞ் சிறு வயதினிலே உலகமதை அதிர வைத்து
உறுதியுடன் இடம் பிடித்தாய் எம் தமிழ் ஈழமண்ணில்
ஆறாண்டு சென்றாலும் ஆறாத்துயரத்தில்-உன்
நினைவில் ஆழ்ந்திருக்கும்-உன்
தமிழ் ஈழமண்ணை மீட்டெடுப்போம்.
இந்நிலை காணஉன் தோழருடன் சேர்ந்து-நீ
இல்லை எம் அருகில்
எங்கள் திலீபன் அண்ணாவே.

-புனா

ஆயிரமாயிரம் வேங்கைகள்
தியாகத்தின் எல்லையில்
தேசத்தின் எல்லையில்
தெரிகிறதா உனக்கு

-நாவலன்

## கோட்டையில் புலிக்கொடி...

கோட்டையில் பறக்குது புலிக்கொடி - இனி
நாட்டினில் இருக்குமோ பகையணி - உன்
கனவுகள் பலிக்குது புரட்சியும் வெடிக்குது
வானகம் இருந்து பாரடா - அண்ணன்
சேனைகள் பாய்வதை பாரடா

சரணம்

வயிற்றினில் வளர்த்தாய் தீயினை - இங்கு
கருகுது பார் எதிர் பாசறை
எரிமலை வெடிக்குது பதிலடி கொடுக்குது
புதுயுகம் புலருது பாரடா - இங்கு
புலிப்படை தோற்பது பொய்யடா

தேருவின் பேரணின் ஆணவம் - கண்டு
குமுறிய தலைவனின் நெஞ்சுரம்
பழியினை முடிக்குது சரித்திரம் படைக்குது
மேற்கினில் சூரியன் உதிக்குமா - பார்த்
தீபனின் கனவுகள் கலையுமா?
மதியினை இழந்திட்ட வானரர் - தலை
விதியினை எழுதிய தலைவனின்
கண்கள் சிவந்தொரு காவியம் படைக்குது
கரும்புலி பாய்வதை பாரடா - உன்
காலடி தொடரும் கேளடா.

- நெடுஞ்செழியன்

## திலீபன் என்றொரு தியாகி

திலீபன் என்றொரு தியாகி பிறந்ததால்,
தியாக வேள்வியில் ஆகுதி யானதால்
கலியகன்றது தமிழர்தம் நெஞ்சினில்
கனல் எழுந்தது கருணை மறவராம்
புலிகள் செங்கடல் புகுந் தெழுந்தனர்
புனிதப் போரின் தலைவன் பேர்சொல
எலிக ளான எம்மவர் பலர்
ஏறுபோல் நடைப் பீடுகொண்டனர்.

'எமது நாடெனும்' எண்ணம் வந்தது.
இனி எவர்க்கும் நாம் அடிமை ஆகிடாத்
துணிவு வந்தது. துடித் தெழுந்தனம்,
தூம்பு தோறுஞ்செந் துகள் பறந்தது,
'பணிதல்' என்பதெம் பகையை அன்றுநற்
பண்பை என்பதைப் பார் உணர்ந்திட
அணிகள் பற்பல, இளைஞர் மங்கையர்
ஆர்பரித் தாடற் போர்க்களப் புக்கார்.

வரிகொள் வேங்கையின் படை வளர்ந்தது
வந்த அமைதிப் படை தளர்ந்தது
பரிவினால் எமைக் காக்க வந்ததாம்
படையின் கையிலேன் ஏ. கே. வந்தது?
புரியும்! ஈழமாம் புனிதக் கொள்கையைப்
போக்கத்தர்ம அசோகன் தந்தது
எரியும் வீட்டினில் பிடுங்க எண்ணிய
இந்தியர் முகத் திரை கிழிந்தது.

— தில்லைச்சிவன்

சிந்தனைக்கு

எஃகு போன்ற உறுதி, இளகிய பரிவு
இரண்டும் கலந்த அபூர்வ கலவைதான் ஒழுக்கம்.
- ராபர்ட் தேஃப்பர்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 26-09-1998
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028
த. பெ. எண்-05

# தமிழ் இனத்தின் கலங்கரை விளக்கு

**1987** செப்டம்பர் 26.

தமிழ் இனத்தின் வரலாற்றுடன் இணைந்துவிட்ட மறக்க முடியாத நாள்.

அன்றுதான் விடுதலை வேள்வியில் லெப். கேணல் திலீபன் தன்னுயிர் ஈந்தார். தியாகி திலீபன் தமிழீழ மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் சாகும்வரை உண்ணா நோன்பிருந்து மரணித்து இன்றுடன் ஆறு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

தியாகி திலீபனின் இம் மரணம் மகத்தானது. போற்றுதற்குரியது. தமிழ் மக்களை உணர்ச்சிப் பிளம்பாக்கியது. அவர்களின் விடுதலை வேள்விக்கு ஆகுதியாகியது.

இதேவேளை, இத் தியாகியின் தீரம் கண்டு உலகமே அதிர்ந்து போனது. எதிரிகள் கலங்கிப் போயினர். இந்திய வல்லாதிக்கத்திற்கும், சிங்கள பேரினவாதத்திற்கும் தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் பரிணாமம் எவ் வடிவங்களை எடுக்கும் என்பதையும் விளக்கியது.

தியாகி திலீபன், தனது உண்ணா நோன்பின் மூலம் தமிழீழ மக்களுக்கு உணர்த்திய அரசியல் பாடம் சிறப்பானது. இந்திய வல்லாதிக்கம் தமிழீழ மக்களுக்கு ஆற்றிய, ஆற்றப்போகின்ற துரோகத்தனத்தை தனது இன்னுயிரை ஈந்து அவர் புரிய வைத்தார். தமிழீழ மக்கள் பல ஆண்டுகளாக கற்றறிய வேண்டிய அரசியல் அறிவை பன்னிரண்டு நாட்களுக்குள் அவர் புரிய வைத்தார்.

இந்தியாவிடம் திலீபன் பெரிதாக எதையும் கேட்கவில்லை. தமிழருக்காக செய்து கொள்ளப்பட்டதாக இந்தியா கூறிய, இந்தியா - சிறிலங்கா சமாதான உடன்படிக்கைக்கு உட்பட்டே தனது ஐந்து அம்சக் கோரிக்கையை முன் வைத்தார். தமிழ் மக்களையும், அவர்கள் மண்ணையும் காப்பாற்றுமாறே கோரிக்கைகள் இருந்தன.

ஆனால், தமிழ் மக்களின் உணர்ச்சிகளை

## ராணிப்பேட்டை தொகுதியில் அ. இ. அ. தி. மு. க வெற்றி

(சென்னை)

இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் அ. இ. அ. தி. மு. க வேட்பாளர் சுமார் பன்னீராயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்.

இத்தேர்தலில் தி. மு. க வேட்பாளர் இரண்டாம் இடத்தையும், பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டனர். காங்கிரஸ் வேட்பாளர், ஐந்தாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார். அ. இ. அ. தி. மு. க வேட்பாளர் கோபி என். மோகனன் 61,587 வாக்குகளையும், தி. மு. க வேட்பாளர் ஆற்காடு வீரசாமி 48,923 வாக்குகளையும், பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளர் இளவழகன் 26,421 வாக்குகளையும் பெற்றுக் கொண்டனர். 29 வேட்பாளர்கள் போட்டியிட்ட இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஐந்தாம் இடத்தையே பெற்றது குறிப்பிடத்தக்கது.

இந்திய மீனவர் தாக்கப்பட்டால்

## சிறிலங்கா கடற்படை மீது கடும் நடவடிக்கை

(சென்னை[

இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களை சிறிலங்கா கடற்படையினர் தாக்கினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும்என்று கடலோரக் காவற் படையின் கிழக்குப் பிரிவுத் தலைவர் கார்மிலோ தெரிவித்திருக்கின்றார்.

அதேவேளை இந்திய மீனவர்கள் சுடப்பட்ட சம்பவம் குறித்து சிறிலங்கா கடற்படையினர் வருத்தம் தெரிவித்திருக்கின்றனர்.

இதேவேளை இலங்கைகடற்பகுதியில் மீன்பிடித்ததாகக் கருதப்பட்டு இம்மாதம் முதலாம் திகதியன்று சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மூன்று தமிழ் நாட்டு மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுநேற்றுசென்னை வந்து சேர்ந்தனர்.

இந்தியக் கடலோரக் காவல் படையின் கப்பலொன்றுஇவர்களை நேற்று சென்னைக்கு அழைத்து வந்தது. இந்த மூவரையும் சிறிலங்கா கடற்படையினர் நேற்று முன்தினம் விடுதலை செய்தார்கள்.

இந்த மீனவர்களின் படகு மீது சிறிலங்கா கடற்படையினர் சுட்டு மூவரையும் பிடித்துச் சென்றது தெரிந்ததே. அந்தப் படகில் இருந்தவேறு இரண்டு மீனவர்களில் ஒருவர் கடலில் மூழ்கி மாண்டு போனார் காயப்பட்ட இன்னொருவரும் இறந்து போனார் அவரது அஸ்தியும் நேற்று சென்னைக்கு கொண்டு வரப்பட்டது.

## கொலரா நோய் மருந்துகள் குமணவில் இன்று வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலைக்கு தேவையான வாந்திபேதி நோய்க்கான மருந்துப் பொருள்கள் ''குமண'' கப்பல் மூலம் இன்று வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ். குடா நாட்டில் தற்போது பரவி வரும் வாந்திபேதி நோய்க்கான மருந்துகள் உடனடியாக தேவை யென சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கம் ஊடாக செய்தி அனுப்பப்பட்டதை தொடர்ந்து மேற்படி மருந்து பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளன என தெரியவருகின்றது இவ்வாறு 5 மெற்றிக் தொன் மருந்துப் பொருட்கள் எடுத்து வரப்படுவதாக தெரியவருகின்றது.

(நி) (க)

யாழ்.

வாறு காண்பிக்கப்பட்டதாக தெரியவருகிறது.

மேலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வண சிங்காவையும் அரசாங் அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்துப் பேச்சு நடாத்தியிருக்கிறார். [க], [நி]

## சிங்கள செய்தியாளர் குழு அடுத்தவாரம் வரும்

தென் பகுதி தினசரிப்பத்திரிகைகளின் செய்தியாளர்குழு ஒன்று அடுத்த வாரம் யாழ்ப்பாணத்துக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளது'

இச்செய்தியாளர் குழுவில் ''லங்கா தீப'' மற்றும் ''ராவய'' ...

திலீபன்

...வனர். இதேயிடத்தில் மாலை பொதுக்கூட்டம் நடைபெறும், ... செலுத்துவர்.

இந் நிகழ்வில் ஆரம்ப நினைவுரையை செல்வி தணிகைச் ...

# தியாகி திலீபன் நினைவாக எழுச்சிக் கூட்டங்கள்

[யாழ்ப்பாணம்]

தியாகிலெப். கேணல் திலீபனின் ஆறாம்ஆண்டு நினைவுக் கூட்டங்கள்விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினரால் சிறப்புற நடாத்தப்பட்டன. இந்நினைவுக் கூட்டங்களில் சிறப்புரைகள், கலைநிகழ்வுகள் என்பன முக்கிய இடம் பெற்றன.

தியாகி திலீபனின் நினைவுக் கூட்டம் விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு தென்மராட்சி கோட்டத்தினரால் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடாத்தப்பட்டது. தென்மராட்சி கோட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. சுரேஸ் அவர்களால் தேசிய கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து தென்மராட்சி கோட்ட மாணவர் அமைப்பு மகளிர் பொறுப்பாளர் தலைமையில் ஆரம்பமாகியது. தொடர்ந்து சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபரும் தென்மராட்சிகோட்ட பிரதி கல்விப் பணிப்பாளரும் தியாகி திலீபனின் நினைவு உரைகளை நிகழ்த்தினார்கள். இந் நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பெரும் தொகையான மக்கள் பங்கேற்றார்கள். கலை நிகழ்வில் தமிழினத்தை கூடிய அளவு ஆக்கிரமித்தது இந்தியாவா? இலங்கையா? என்ற தலைப்பில் பட்டிமன்றமும், மற்றும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

தியாகி திலீபனின் நினைவுக் கூட்டம் தீவகக்கோட்ட மாணவர் அமைப்பு மாணவர்களால் யா/வைத்தீஸ்வராவில் நடாத்தப்பட்டது. யாழ் மாவட்ட மாணவர் அமைப்பு மகளிர் பொறுப்பாளர் செல்வி வாசுகி மங்கள விளக்கேற்றி வைத்தார். தொடர்ந்து தீவக கோட்ட தளபதி திரு. வில்லவன் அவர்களால் ஈகைச் சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து தியாகி திலீபனின் நினைவு உருவப் படத்திற்கு யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. பார்த்தீபன் அவர்களால் மலர் மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து தீவக கோட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. ஒப்பிலாமணி தலைமையில் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து தீவகக்கோட்ட திட்டமிடல் கல்விப் பணிப்பாளர், தீவக கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், தீவககோட்ட மகளிர் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் ஆகியோர் உரைகளை நிகழ்த்தினார்கள். தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. இந்நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பெரும்தொகையான மக்கள் கலந்துகொண்டனர்.

தியாகி திலீபனின் நினைவான எழுச்சிக் கூட்டம் பண்டத்தரிப்பு கல்விக்கோட்ட மாணவர் அமைப்பினால் சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் சி. தமிழ்மறவன் அவர்களது தலைமையில் சிவப்பிரகாச ம. வித்தியாலயத்தின் அதிபர் திரு. செ. குபேரநாதன் அவர்கள் ஈகைச் சுடர் ஏற்ற ஆரம்பமாகியது. தேசியக்கொடியை யாழ். மாவட்ட விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி அவர்கள் ஏற்ற மாணவர் அமைப்பு மாணவிகளால் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. திலீபன் அவர்களின் உருவப் படத்திற்கு மரஞ்சலி செலுத்தும் நிகழ்வு அடுத்து இடம் பெற்றது.

இவ் எழுச்சிக் கூட்டத்தில் செல்வி தணிகைச்செல்வி, பண்டத்தரிப்புக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. மனோகரன் யாழ். மாவட்ட மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. அ. பார்த்தீபன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

இறுதியாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினதும் கலை பண்பாட்டுக் கழகத்தினரதும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## மீனவருக்கு நிவாரணம்; முடிவு எதுவும் இல்லை

(கொழும்பு)

வடபகுதி கடல்தடைச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கும்படி ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சென்றிருந்த யாழ். அரசாங்க அதிபர் திரு. கா மாணிக்கவாசகர் ஜனாதிபதி திரு டிங்கிரிபண்டா விஜயதுங்காவுடன் நடாத்தியபேச்சு வார்த்தைகளின்போது மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வடபகுதியில் அமுல் படுத்தப்பட்டுவரும் இக்கடல் தடைச்சட்டம் காரணமாக ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

இவ்வாறு பாதிப்படைந்துள்ள மீனவர்களுக்கு நிவாரணம்வழங்கும் படி அரச அதிபரினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் குறித்து தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. எனினும் நிவாரணம் வழங்குவது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லையென்று தெரியவருகிறது. (க), (நி)

## லெப். கேணல் திலீபன்

திலீபனின் வார்த்தைகளும் வாழ்க்கையும் திகழும்.

பன்னிரு தினங்களிலும்பசித்திருந்து அவன் நடத்திய பாகம் இந்த மண்ணில் எவ்வளவு தூரம் ஆழப் பதிந்துள்ளது என்பதை அது எடுத்துக் காட்டும்.

''எமதுஇறுதிஇலட்சியத்தை தலைவருடன் இணைந்து நீங்கள் அடையவேண்டும் என்பதே எனது இறுதி ஆசை'' என்றும்

'போராடத்தயாராகுங்கள்; எனக்கு விடைதாருங்கள்'' என்றும் அவன்கூறியவார்த்தைகள் ஒவ்வொன்றும் தமிழ் மக்கள் ஒவ்வொருவரது செவிகளிலும் ரீங்காரித்துக்கொண்டிருக்கும். அதுவரை தமிழீழ விடுதலைப் போராட்டமும் தொடர்ந்து முன்னேறிக் கொண்டேயிருக்கும்

ஆனால், தமிழ் மக்களின் உணர்ச்சிகளை இந்தியா ஒரு பொருட்டாக கருதவில்லை. அது மட்டுமல்ல, சாத்வீகப் போராட்டத்தையே இந்தியா மதிக்கவில்லை. காந்தியின் தாயகம், காந்தீயத்தையே ஏளனம் செய்தது. காந்தியைக் கொன்றது போல் காந்தியத்தையும் கொன்றது.

இதேவேளை, இந்தியாவின் அரசியல் கபடத்தையும், ஏகாதிபத்திய சிந்தனையையும் தமிழ் மக்கள் புரிந்து கொண்டனர். இந்தியா என்றுமே தமிழ் மக்களின் பாதுகாவலனாக இருக்கப்போவதில்லை என்பதையும், ஓர் ஆக்கிரமிப்பாளனாகவே இருக்கப் போகிறது என்பதையும் விளங்கிக் கொண்டனர்.

அத்தோடு தனது மரணத்தின் மூலம் தியாகி திலீபன் தமிழரின் சுதந்திர வாழ்வும், பாதுகாப்பும் அவர்களின் கைகளிலேயே உள்ளது என்பதை உணர்த்தியவர். அதாவது, எமது விடுதலையை நாமே போராடிப் பெறவேண்டும் என்பதைப் புரிய வைத்தவர்.

மேலும், எந்த ஒரு நாடும் தனது நலன் என்பதின் அடிப்படையிலேயே செயற்படும், ஏனைய நாடுகளினதோ, தேசிய இனங்களின் நலன்களையோ என்றுமே கவனிக்கப்போவதில்லை என்ற அரசியல் சித்தாந்தத்தின் அடிப்படையையும் தனது தற்கொடையின் மூலம் தியாகி திலீபன் புரிய வைத்தார்.

இதேவேளை, தான் ஏற்படுத்தும் அரசியல் விழிப்புணர்ச்சி மூலம், தமிழீழ விடுதலைப் போராட்டம் எழுச்சி பெறும், ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் போராட்டத்தில் இணைவார்கள், தமிழீழம் மலரும் என தியாகி திலீபன் உறுதியாக நம்பினார். இதனை தனது இறுதிப் பேச்சுக்களின் போது தியாகி திலீபன் வெளியிட்டார்.

தியாகி திலீபனின் இவ் எண்ணங்கள், அபிலாசைகள் வீண் போகவில்லை. ஆயிரக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் இன்று தமிழீழ விடுதலைப் போரில் அணிவகுத்து நிற்கின்றனர். அவர்கள் இந்திய ஏகாதிபத்தியத்தை தமிழர் தாயகத்தில் இருந்து வெளியேற்றினர். சிங்கள பேரினவாதத்திற்கு பேரிடிகளை ஏற்படுத்தியுள்ளனர். தியாகி திலீபனின் இலட்சியமான சுதந்திர தமிழீழம் நோக்கி முன்னேறி வருகின்றனர், இது தமிழ் மக்கள் தியாகி திலீபனுக்கு செய்யும் அஞ்சலியாகவும் அமைந்துள்ளது.

பொதுக்கூட்டமும் நடைபெறும், தீவகக்கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. செம்மணன் தலைமையில் நடைபெறவிருக்கும் உண்ணாவிரத நிகழ்வில் மகளிர் அமைப்பு தளபதி செல்வி விதுசா ஈகைச்சுடரேற்றுவார். தேசியக் கொடியை யாழ் மாட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராசா ஏற்றிவைப்பார். தியாகி திலீபனின் உருவப் படத்திற்கு அவரது சகோதரன் மலர்மாலை அணிவிப்பார். ஆரம்ப உரையை திரு. தேவரண்ணா நிகழ்த்துவார். காலை 10.48 மணிக்கு பொது மக்களால் மலரஞ்சலி செலுத்தப்படும். நீதித்துறைப் பொறுப்பாளர் திரு. பரா நினைவுக் கருத்துரையையும், நிறைவுக் கருத்துரையை தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசனும் நிகழ்த்துவர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

மாலை 4.00 மணிக்கு நல்லூர் வட்டப் பொறுப்பாளர் திரு. எழிலன் தலைமையில் நினைவுக் கூட்டம் இடம்பெறும். கருத்துரைகளை அடுத்து கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## வடமராட்சிக்கோட்டம்

வடமராட்சிக் கோட்டத்தில் உண்ணாவிரதமும் நினைவுப் பொதுக்கூட்டமும் அல்வாய் மாலுசந்தி பிள்ளையார் கோவிலில் நடைபெறும். காலை 7.00 மணிக்கு வடமராட்சி மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி மலையரசி தலைமையில் ஆரம்பமாகவுள்ள உண்ணாவிரத நிகழ்வுகளில் ஈகைச்சுடரை யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி ஏற்றிவைப்பார். தேசியக்கொடியை வடமராட்சி பொறுப்பாளர் திரு. அருணா ஏற்றிவைப்பார். வடமராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன் தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு மாலை அணிப்பார். காலை 10.48 மணிக்கு மக்கள் மலரஞ்சலி

செல்வியும், நினைவுக் கருத்துரையை யாழ். மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் திரு. செ. இளையவனும், நிறைவுரையை திரு தேவர் அண்ணாவும் நிகழ்த்துவர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

மாலை 4.00 மணிக்கு வடமராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன் தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமாகும். இதில் நினைவுக் கருத்துரைகளை அடுத்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## தென்மராட்சிக் கோட்டம்

தென்மராட்சிக் கோட்டத்தில் நுணாவில் மணங்குணாய் பிள்ளையார் கோவில் முன்றலில் உண்ணாவிரதமும் பொதுக்கூட்டமும் இடம்பெறவுள்ளன. காலை 7.00 மணிக்கு தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சுதண்ணா தலைமையில் ஆரம்பமாகவுள்ள உண்ணாவிரத நிகழ்வில் [illegible] மராட்சிப் பொறுப்பாளர் திரு. பரணி ஈகைச்சுடரை ஏற்றுவார். தென்மராட்சி மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி கலை தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு மாலை அணிவிப்பார். காலை 10.48 மணிக்கு மக்கள் மலரஞ்சலி செலுத்துவர். இந்நிகழ்வில் ஆரம்ப உரையை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகமும், நினைவுரையை மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி சுடரவும், நிறைவுக் கருத்துரையை அரசியற் பயிற்சிப் பள்ளிப் பொறுப்பாளர் திரு அரசண்ணாவும் நிகழ்த்துவர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

நினைவுக் கூட்டம் மாலை 5.00 மணிக்கு தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு சுதண்ணா தலைமையில் ஆரம்பமாகும். கருத்துரைகளை அடுத்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

“ராவய” ஆகிய சிங்களத் தினசரிகளின் செய்தியாளர்கள் அடங்கியிருப்பார்கள் என்றும் சுமார் ஆறு செய்தியாளர்கள் இவ்வாறு யாழ்ப்பாணம் வருவார்கள் என்றும் தெரியவருகிறது. [ச].[நி]

---

வாதுவ

தடையவுள்ளது.

இக்கப்பலில் முக்கியமாக தனியார் துறையினருக்கான பொருள்களே கூடுதலாக எடுத்துவரப்படுவதாக யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார் மேலும் இக்கப்பலில் ஒக்டோபர் மாதத்திற்கான பென்சன் வவுச்சர்களும் ஏற்றப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார் [யா]

---

குடாநாட்டிற்த

தாகவும், எனவே யாழ். மாவட்டத்திற்கான சனத்தொகையை தன்னிடம் அக்குழு கோரியுள்ளதாகவும், அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் ஒரு புள்ளிவிபரத்தை மிக விரைவில் இக் குழுவுக்கு சமர்ப்பிக்கவிருப்பதாகவும், இதற்கான ஏற்பாடுகள் அடுத்தவாரத்திலிருந்து ஆரம்பமாகும் எனவும் தெரிவித்தார். (ச) (நி)

---

இடைக்கால

சிக்கு வழங்கிய பேட்டியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக் குழு மிக உபயோகமான பரிந்துரைகளை வழங்கியுள்ளது குறிப்பாக அதிகாரங்களை வழங்குவது பற்றிய பரிந்துரைகளைச் சொல்லலாம் அது தன்னுடைய இடைக்கால அறிக்கையில், ஒரு சமஷ்டி ஆட்சி அமைப்புக்கு உட்பட்டு, ஒரு வகையான தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது என்றார் அவர்.

அந்தச் செவ்வியில்-

மேற்குறிப்பிட்ட அளவிற்கு நாம் முன்னேறியுள்ளோம் அரசியல் தீர்வு காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பல முயற்சிகளுடன் நான் தொடர்பு கொண்டவன் என்ற வகையில் நம்பிக்கையுடனும், பொறுப்புணர்ச்சியுடனும் கூறுகிறேன் இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை என்று கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு அது அனைவராலும் ஏற்கப் படவேண்டும் தன்னிச்சையினால் எடுக்கப்படும் முடிவுகளால் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது.

நிலைமைகளை எவரும் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. தன்னால் இயன்றது முழுவதையும் அரசு செய்துள்ளது, தொடர்ந்தும் செய்து வரும். பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவும், முடித்து வைக்கவும் அரசு தன்னால் இயன்றது அனைத்தையும் செய்து வரும் என்றார்.

இதேவேளை இப்பேட்டியில் வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி அமைச்சர் ஹமீத் எதுவும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் மேலும் இப்பேட்டியில் இன்று உள்ளது ஒரு தேசிய பிரச்சினையே இது ஒரு சர்வதேச பிரச்சினையில்லை எனவே இதற்கான தீர்வை நாமே தேட வேண்டும் 'பயங்கரவாதம்' இருப்பதனாலேயே இப்பிரச்சினைக்கு இன்று வரை தீர்வு ஏற்படவில்லை. எனவே தான் 'பயங்கரவாத' பிரச்சினையை தீர்த்துவிட்டு தேசிய பிரச்சினையை தீர்க்க வேண்டும் என ஜனாதிபதி கூறுகிறார்.

அரசாங்கம் வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேசி ஓர் அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்த இன்னும் தயாராகவேயுள்ளது என்றார்,

---

## 6-ம் ஆண்டஞ்சலிகள்

போர் தொடுத்த அன்பனுக்கு
ஆறாம் ஆண்டஞ்சலிகள்

தமிழீழ விடுதலைக்கு
வழிகாட்டி சென்றவரில்
முந்தி நிற்கும் தியாகிக்கு
ஆறாம் ஆண்டஞ்சலிகள்

தமிழீழ தேசத்துக்குள்
மாந்தோப்பில் மந்தி அது
புகுவதுபோல், இந்தியர்கள்
புகுந்து நின்ற வேளையிலே

போர்க் கொடியை
தூக்கி இங்கு அகிம்சையிலே

பாரினிலே அகிம்சை என்றால்
பாரதம்தான் என்ற மாயைதனை
ஊரெழுவில் பிறந்த மைந்தா
உலகறியச் செய்து வைத்தாய்

இந்நாளை தமிழ்தேசிய தினமாக
பிரகடனம் செய்து விட்டார்
செந்தமிழர் வாழ்வோடு கலந்துவிட்ட
செம்மலுக்கு ஆறாமாண்டஞ்சலிகள்.

சி. பாவரசன்

## இதய அஞ்சலி



அன்னையின்
மடியில்
06 02-1963
அம்மனின்
அழைப்பில்
21-09-1993

### செல்வி பார்வதி (பட்டு) செல்லையா

பட்டாம் பூச்சி போல்
பட்டு பறந்து வந்தாய்
பட்டப்படிப்புகள் கல்லூரிக்கு! - எனக்கு
இருக்கையில் இடந்தந்தாய் - என்
இதயத்தில் ஊன்றி விட்டாய்
உன் நினைவால் நான் அனலில்
வட்ட புழுப்போல் துடிப்பது
உனக்குத் தெரிகிறதா?
உன் நினைவலைகள் என்றும் - என்
இதயத்தை விட்டு நீங்காது!
பட்டு இது உறுதி.

உன் உயிர்த்தோழி
ச. மலர்

(6106)

## 41-ம் நாள் நினைவஞ்சலி



### இராசநாயகம் நகுலேஸ்வரன்

தோற்றம்: 16 - 05 - 1971
மறைவு: 17 - 08 - 1993

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், பெற்றோர்,
சகோதரர்கள், மச்சாள்மார்,
மச்சான்மார், உற்றார், உறவினர்.

மூனிஸ் லேன்,
கோப்பாய் தெற்கு. (6105)

## 2-ம் ஆண்டு நினைவலைகள்

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 25-09-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11042

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

27-5822, 27-9771, 24-9773, 27-3910, 24-6533
24-9676, 24-0336, 28-7978, 26-2502, 26-1658
26-4727, 22-3088, 24-8631, 26-7187, 41-7109
41-9579, 24-7044, 41-8686, 24-2355, 24-8353
27-6032.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

40-0770, 42-1721, 27-4289, 24-5509, 27-5823
24-4282, 27-5633, 26-0512, 41-7230, 24-5877
43-4580, 24-2493.


## யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

### VON RYAN'S EXPRESS

இத்துடன் 'இதயபூமி 1' [மன்கிண்டிமலை]
இராணுவமுகாம் தகர்ப்பு] ஒளிவீச்சு
காண்பிக்கப்படுகிறது

தினசரி மாலை 4.00 மணி, 6-00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10-30 மணி,
மாலை 4-00 மணி, 6-00மணி (ஐ-7352)


## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். கலையில்பன்

[தியாகராஜாக் குருக்கள், இராமையா]

பிறப்பு: 31-01-1976 வீரச்சாவு: 26-09-199[illegible]

## வீரச்சாவு

மட்டக்களப்பு செம்பிமடு பகுதியில் கடந்த 22-ம் திகதி சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் லெப்டினன்ட் கவுண்டான் (பொன்னையா தர்மலிங்கம் கரப்பனை சவனப்பிட்டி, மன்னம் பிட்டி) வீரவேங்கை ஜனகன் (கண்ணமுத்து வாமதேவன் நடுக்குடியிருப்பு பனிச்சங்கேணி) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.



லெப். கவுண்டான்



வீரவேங்கை ஜனகன்

## அக்காச்சிகிராமத்தில் திலீபன் நினைவு

தியாகி திலீபனின் 6ஆம் ஆண்டு நினைவுக் கூட்டமும் கப்டன் அக்காச்சி எழுச்சிக் குடியிருப்பு 2-ம் ஆண்டு நிறைவு விழாவும் இன்று இரவு 8 00 மணிக்கு கப்டன் அக்காச்சி எழுச்சிக்குடியிருப்பிலுள்ள மேஜர் சுபாஸ் விளையாட்டு அரங்கில் நடைபெறும்.

### கண்காட்சி

சுந்தரோடை விஜய ஆனந்தன் பொது நூல் நிலையத்தில் இன்று முதல் 30-ம் திகதிவரை ஐந்து நாட்களுக்கு தினசரி காலை 7.00 மணிமுதல் மாலை 6 00 மணிவரை நடைபெறும்.

பல்கலை அறிவொளி நூல்

## மண்ணெயுடன் நில்கிரி

யாழ். குடாநாட்டிற்கு தேவையான மற்றும் ஒரு தொகுதி மண்ணெண்ணெயை ஏற்றிக்கொண்டு 'நில்கிரி' கப்பல் நேற்று பருத்தித்துறையை வந்தடைந்தது.

இதில் யாழ். குடாநாட்டின் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்குரிய 2235 பீப்பா மண்ணெண்ணெய்மட்டும்கொண்டு வரப்பட்டுள்ளதாக யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர்தெரிவித்துள்ளார். (க), (நி)


## முழுநேர ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்

### கணித, விஞ்ஞான, தமிழ் ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர்

அவர்களிற்கான தகைமைகள்:

01. பட்டதாரிகள்
02. மேற்குறிப்பிட்ட பாடங்களில் கற்பித்த அனுபவம் உள்ளவர்கள்.
03. கல்விப் பொதுத் தராதர (சா/தரம்) கற்பிக்கும் பாடம் திறமைச் சித்தி எய்தியிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த (உ/தரத்தில்) கற்பிக்கும் பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

- இவர்கள் நேர்முகப் பரீட்சையின் மூலம் தேர்ந்து எடுக்கப்படுவார்கள்.
- மேற்குறிப்பிட்ட தகைமை உள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பிக்கவும்.

விள. இல. 201
மே/பா. ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
[சி/7471]


## தியாகி திலீபனின் 6-வது ஆண்டு நினைவாக...





## வீரவேங்கை தும்பன்

(மகாதேவா குமணன்)

தாயவளின் மடியினுக்கு 01-08-1976 | தமிழீழ விடிவினுக்கு 19-09-1991

திதி: 26-09-1993

பால்மணம் மாறாப் பாலகன் - நீ
பாவிகள் எமைப் பரிதவிக்கவிட்டுப்
பார்மீட்கப் புறப்பட்டனையோ!
வழிமேல் விழிவைத்து - நீ
வருவாய் எனக் காத்திருக்க
வீறு கொண்டு எழுந்து நீ
தமிழ் மண்ணை மீட்டெடுக்க - எம்
இதய பூமியாம் மணவறில்
மாவீரனானாயோ!

26-9-93இன்று சக போராளிகளையும், உற்றார், உறவினர்களையும், நண்பர்களையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

உன்பிரிவால் துயருறும்,

மடத்தடி,
சாவகச்சேரி. (6109)

பெற்றோர், தம்பிமார்,
உற்றார், உறவினர்

---

பிறப்பு: 31-01-1976 வீரச்சாவு: 26 09-1992

தியாகச் செம்மல் திலீபனின் நினைவினை நிறைவேற்ற பூநகரி, ஆலங்கேணியில் சிங்கள வெறியருடன் போராடி வீரச்சாவை மேற்கொண்டு வீர சொர்க்கம் அடைந்த உங்களுக்கு எமது இதயம் கலந்த கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம். இத்தினத்தில் சாத்வீகப் போராட்டத்தில் வீர சொர்க்கமடைந்த திலீபனுக்கும், இவருடன் வீரச் சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் இந்த நாளில் எமது வீர வணக்கத்தைச் செலுத்துகின்றோம்.

க. சோமசுந்தரம் அதிபர்
தையிட்டி சிவகுருநாதர் வித்தியாலயம்
தி. சோமாஸ்கந்தராசா குருக்கள்
[ஆசிரியர் குடத்தனை அ. த. க. பாடசாலை]
மற்றும் சகோதரர்கள், குடும்பத்தினர்.

நெல்லண்டை,
பருத்தித்துறை. (6110)

---

கள் காட்சிக்கு வைக்கப்படும். இன்று இக் கண்காட்சி காலை 9 00 மணிக்கு வைபவ ரீதியாக திறந்துவைக்கப்படும்

### கப்பலில்

அனுப்பப்பட்ட உணவுப் பொருட்களின் அளவுகளில் மோசடிகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து அந்நிய நாடொன்றிற்கு பொருட்களை அனுப்பும் போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் வடபகுதிக்கு அத்தியாசியப் பொருட்களை அனுப்பும் போதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தெரிந்ததே. (நி) [ச]

---

வடபிராந்திய யாழ் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம் அளிக்கும்

## நிதி உதவி கலை நிகழ்ச்சிகள்

இடம்: யாழ் இந்துக் கல்லூரி காலம்: 16.10.93 நேரம்: இரவு 6.00 மணி

### நிகழ்ச்சிகள்


1 பருத்திநகர் சாண்டோ எம். துரைரெத்தினம் அவர்களினால் நடாத்தப்படும் 'வீரதீரச் செயல்கள்'' முதல் முறையாக யாழ். நகரில் அரங்கேறவுள்ளது.
(அ) நெருப்பு புதைகுழியில் சில மணி நேரம் படுத்திருத்தல்.
(ஆ) இரண்டு உழவு இயந்திரத்தை எதிர் எதிராக ஒரே நேரத்தில் உடலில் ஏற்றுதல்.
(இ) அதிபாரம் கொண்ட லொறியினை மார்பில் ஏற்றுதல்.
(ஈ) ஓடும் வாகனத்தை தொண்டையினால் இழுத்தல்.
(உ) 35 கிலோ எடையுள்ள இரும்புக்குண்டினை 7 அடி உயரத்திலிருந்து வயிற்றில் ஏந்துதல்.
(ஊ) பாரம் கொண்ட கல்லை மார்பின் மேல் வைத்து சம்மட்டியால் அடித்து உடைத்தல்,
(எ) இன்னும் பல வீரதீரச் செயல்கள்.
2. மோகன் மாஸ்டர் அவர்களினால் நடாத்தப்படும் கராட்டி விளையாட்டுக்கள்
3. கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்களின் பட்டிமன்றம்,
4. கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்படும் நாடகம்.

- தாவடி மெடிக்கல்ஸ் கோண்டாவில்
- மெடிபிளஸ் சங்கானை
- சத்தியா பாமசி வல்வெட்டித்துறை
- மெடி ஸ்குயர்ஸ் மானிப்பாய்
- ஸ்ரீ முருகன் மெடிக்கல்ஸ் நெல்லியடி பருத்தித்துறை
- அம்பாள் பாமசி சாவகச்சேரி

அனைத்து தமிழீழ வர்த்தகர்களையும், பொது மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம். நன்றி

(சி 7493) வ. யா. ஆ. ம. வ. சங்கம்

---



எங்கள் தமிழர் போரை அடக்க
இங்கு வந்த ஈனர் திகைக்க
பொங்கி எழுந்த புரட்சியின் வித்து
மங்காப் புகழுடை திலீபனெம் சொத்து.

தங்க மாமணித் தமிழீழம் தன்னை
தலைவன் வழியிலே மீட்டிட எண்ணி
சிங்களப் படைகளை சிதறவே வைத்தோன்
இந்தியப் படைகளையும் எதிர்த்தே நின்றோன்.

ஆறு ஆண்டுகள் போயின ஆயினும்
எங்கள் அருமைச் சுடரோன் ஆகுதியாகி
நூறு ஆண்டுகள் போயினும் மண்ணில்
வேரெனத் திலீபன் புகழ் வாழ்ந்திடும்.

சேரன் பல்பொருள் வாணிபம்
83, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம். [சி-7499]

---

## மரண அறிவித்தல்

## திருமதி சந்திரேஸ்வரி நவரத்தினம்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திருமதி தி. சந்திரேஸ்வரி நவரத்தினம் நேற்று (25-9-93) காலமாகிவிட்டார்.

இவர் நவரத்தினத்தின் அன்புமனைவியும், அருள்சோதி (செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி), தக்ஷனி (3-ம் வருடம் இராமநாதன் நுண் கலைப் பிரிவு), தவஜோதி (போராளி) ஆகியோரின் அன்புத் தாயாரும் டாக்டர் கந்தையா சண்முகத்தின் சிரேஷ்ட புதல்வியும் தனஞ்சயனின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மாலை 3-00 மணியளவில் இவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
நவரத்தினம் (கணவர்)

மகேஸ்வரி வாசா,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (6111)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது